விசேஷ விளம்பரத்திற்கு!

# இந்துசாதனம்

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

Registered as a Newspaper in Ceylon.
P. M. G. No. H. A. 59/300 of 1939.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈச னெந்தை யிணையடி நீழலே.

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ந் தேதி ஆரம்பமானது

விசேஷ விளம்பரத்திற்கு

[புத்தகம் ௫௩]  யாழ்ப்பாணம்:— "விஷு" ௵ புரட்டாதி ௴ ௩ ௨ (1941 செப்டம்பர் 18 வியாழக்கிழமை)  [இலக்கம் ௬௪]


## அன்னை கிருஷ்ணபாய்

(திரு. K. இராமச்சந்திரன் அவர்கள் எழுதுவது)

ஞானேஸ்வரர், ஏகநாதர், சமர்த்த ராமதாசர், துக்காராம், நாமதேவர், சக்குபாய், சாந்தபாய் முதலாம் மகாத்மாக்களுக்குப் பிறப்பிடமாய்ப் புகழ்பெற்ற மஹாராஷ்டிர தேசத்தில், ஹவேரா என்னும் ஒரு சிறுபட்டினமுண்டு. இற்றைக்கு முப்பத்தெட்டு ஆண்டுகட்கு முன் அப்பட்டினம் வைசூரி நோயால் தாக்கப்பட்டது. நோயின் அகோரம் பொறுக்கமுடியாது குடிசனங்களில் பலர் அயலூர்களுக்கு ஓடிவிட்டனர். சிலர் அருகாமையிலுள்ள காட்டில் பல தினங்கள் கழிக்கவேண்டிய துர்ப்பாக்கியத்திற்கு ஆளாயினர். இக்கூட்டத்தில், சாரஸ்வத பிராமண குலத்திலுள்ள ஓர் பெண் பூரணகர்ப்பவதியாக ஒரு மரத்தடியில் தன்விதியை நொந்த வண்ணம் வாடியமுகத்துடன் காணப்பட்டாள். சோபகிருது வருஷம், புரட்டாசிமாசம், வெள்ளிக்கிழமை மஹாளய அமாவாசையும் பூரட்டாதி நட்சத்திரமும் பொருந்திய வேளையில் அப்பெண்ணுக்குப் பிரசவநோய் தோன்றி, அன்றிரவு நான்கு நாழிகைக்குள் ஓர் பெண் குழந்தை பிறந்தது. இவ்வித நிர்ப்பாக்கிய நிலையில் ஜெனித்த அந்தக் குழந்தைதான் இன்று "உலகமாதா" "தாய் அன்னை" எனப் பக்த கோடிகளால் கொண்டாடப்படும் கிருஷ்ணபாய் ஆவர். பொதுவாகப் பாரமார்த்திக உலகிலும், சிறப்பாகப் பெண்ணுலகிலும் இந்த அம்மையார் இன்று வகிக்கும் பதவி தனிப் பெருமை வாய்ந்தது.

### அம்மையாரின் உலகவாழ்வு

குழந்தையின் சாதகத்தைக் கணித்த சோதிடர்கள் அதற்கு மாரகனும் வேறுபல தோஷங்களும் இருப்பதாக அச்சுறுத்தி, அந்நோர் சந்நியாசிக்குத் தானம் பண்ணி அவரிடமிருந்து இரண்டு ரூபாய்க்கு கிரயத்திற்கு வாங்கச் செய்தனர். இளம் வயதிலேயே துறவுபூண்டு, தெய்வத்தன்மை அடைந்த, ஆத்மப் பசியாளர்க்கு ஞானப்பாலூட்டும் பெருவாழ்வுக்கு முன் அறிகுறியாகப் போலும் சிசுவாயிருக்கும் போதே கிருஷ்ணபாய்க்கு சந்நியாசியின் உறவு கிடைத்தது. 'செவ்வாய் தோஷம்', 'வெள்ளி நீசம்', 'சனி பார்வை' என்று பயமுறுத்திய சோதிடர்க்கு, அச்சாதகத்தில், பிருகுமைந்தனை புகழும் பூரண சந்நியாச யோகம் சிறப்புற்றிருந்தது தெரியவில்லை. வயிற்றுப் பிழைப்புக்காகச் சோதிடம் பயில்வோர்க்கு, இந்த அரிய சாஸ்திரத்தின் சூக்குமமான தத்துவங்கள் எப்படி விளங்கக்கூடும்?

கிருஷ்ணபாயின் இளமைக்காலம் 'விளையும் பயிரை முளையிலேயே தெரியும்' என்ற பெரியோர் வாக்குப் பெரிதும் பொருந்தியதாய் இருந்தது. பக்தி, விசுவாசம், பயன் கருதாச் சேவை முதலாய குணங்கள் தாமே அமைந்தன. பள்ளிக்கூடக் கல்வியில் மனஞ்செல்லவில்லை. புத்தியை ஆசானாய்க் கொண்டு, மனம் என்னும் தோழனுடன் வாழ்க்கை யென்னும் கல்லூரியில் கற்குங் கல்வியே கிடைத்தது. அந்தமற்ற சொரூபனைக் கற்று முற்றியவர்கட்கு, அச்சுநூல்கள் வெற்றுநூல்களேயாகும். சூரிய மண்டலத்திற்கு மின்சார ஒளி தேவையா? பதினாவது வயசில் தந்தை இறந்தனர். அச்சம்பவத்தால் "நெருநலுளனொருவ னின்றில்லை யென்னும், பெருமையுடைத்திவ் வுலகு" என்ற பெருமொழியின் அருங்கருத்து கிருஷ்ணபாயின் மனதிற் பதிந்தது. பதின்மூன்றாவது வயசில் பருவமடைந்து, அதேவயசில் லட்சுமணராவ் என்னும் குணசீலருக்கு வாழ்க்கைப்பட்டு, மூன்று ஆண்மக்களைப் பெற்று, பம்பாய் நகரில் ஏழாண்டு இன்பமயமான இல்லறம் நடாத்தினர். இருபதாவது வயசில் தமது பத்தாவின் அகால மரணத்தால் அம்மையாரின் இளவேனிற்காலமானது திடீரென இலையுதிர்காலமாக மாறியது. கவலை வெள்ளம் கரைபுரண்டோடியது. "துன்பக் கண்ணீர்த் துளிகள் தேற்குவன் ஆனந்த, இன்பக் கண்ணீர் வருவதெந் நாள் பராபரமே" என்று கதறினர்.

### குருவைத் தேடல்

கிருஷ்ணபாயின் வாழ்வின் இரண்டாவது காண்டம் கண்ணீருடன் ஆரம்பமாயது. இறந்த நாயகரின் சகோதரரான டக்டர் ராமாராவின் ஆதரவில் குழந்தைகளுடன் வாழ்ந்து வந்தார். இவ்விதம் ஆண்டு ஒன்று கழிந்தும் கவலை குறையவில்லை. உலகவாழ்வு உவர்ப்பாய்த் தோன்றியது. உடலை வெறுத்தார். மனை ஒறுத்தார். உயிர்க்குறுதி யாதெனவும், அதை உணர்த்த சற்குரு எப்போ கிடைப்பாரெனவுஞ் சிந்திக்கலானார். ஹுப்ளியில் வசித்த சித்தாரூட சுவாமிகளிடம் பஞ்சாக்ஷர உபதேசம் பெற்று, அதாவது ஆச்சிரமத்தில் நான்கு மாதங்கள் தங்கி சில சாதனைகள் கற்றார். அடுத்த இரண்டு ஆண்டுகளும் அந்த மந்திர ஜெபத்திலும், மஹாராஷ்டிர பக்தர்களின் சரித்திரங்களைப் படிப்பதிலும் அவர்களது பக்திரசம் ததும்பும் பாடல்களைக் கேட்பதிலும் கழிந்தன. இவற்றின் பயனாக ஞானப்பசி அதிகரித்தது. சுகுணங்களில் முதலாய சாத்விகத்தில் சாத்விகம் பொருந்தவும், சற்குருவைச் சந்திக்குங்காலமும் அதற்கேற்ற வசதிகளும் தாமே அமைந்தன. உத்தியோக மாற்றம் காரணமாக டக்டர் ராமாராவ் தமது குடும்பத்தை காசர்கோட்டுக்கு அனுப்ப நேர்ந்தது. கிருஷ்ணபாயும் அவர்களுடன் கூடிச் சென்றார். "சாவாமல் செத்திருந்து சற்குருவின் பொன்னடிக்கீழ் வேவாமல் வெந்திருக்க வேண்டுவது மெக்காலம்", எனச் சதா புலம்பிக் கொண்டிருந்த அம்மையார் காதில் அவ்வூருக்கருகிலுள்ள கதிரிமலை அடிவாரத்தில் தவஞ்செய்து கொண்டிருந்த சுவாமி ராமதாசரின் புகழ் எட்டுவதற்குப் பல நாள் எடுக்கவில்லை. அவரைப் பார்க்க வேணவிப்பட்ட அடுத்த தினமே அந்த மகாத்மாவின் தரிசனமுங் கிடைத்தது. பல ஆண்டுகளாய் அம்மையாரை வாட்டிவந்த இதயப்பசியும் ஆத்மதாபமும் அத் தரிசனத்தால் தீர்ந்தன. தாம் இதுகாறும் செய்த சாதனைகளும், தேடிஓடிய ஓட்டமும் இந்தப் பெரியாரைக் குருவாய்ப்பெறுவதற்காகவே என்ற நம்பிக்கை அவர் உள்ளத்தில் உதித்தது. பக்தி பரவசத்துடன்,

"...............................
வேண்டியது நீயல்லால் வேறெதும் வேண்டேன
ஆண்டேனே உன் அன்பினில் என் அன்பனைத்துங் கலந்தே
ஆகுக அருள்பரமும் ஆனந்தம் வேண்டும்,"

எனத் தோத்தரித்து அவர்பாதத்தில் சரண் புகுந்தார். சுவாமிகளும் தம்மிடம் அடைக்கலம் புகுந்த அடியாளை அன்புடன் ஏற்று, ஆசீர்வதித்து, தாரக மந்திரத்தை உபதேசித்தார்.

### சுவாமி ராமதாசர்

தர்மங் குன்றி அதர்மம் பரவும் போதெல்லாம் பழையபடி தர்மத்தை நிலைநிறுத்துவதற்காகத் தாம் அவதாரம் எடுப்பதாகப் பகவான் கீதையில் கூறியிருக்கிறார். இக்கூற்றைச் சரித்திர ஆராய்ச்சியுடன் ஒத்துப்பார்த்தால் முழுதும் உண்மையே என்பது விளங்கும். ஒவ்வொரு உலக நெருக்கடியிலும் அதனைச் சீர்திருத்தக்கூடிய ஆத்ம வீரர்களின் கூட்டம் தோன்றியே உளது. இக்குழுவை உலகுக்களிக்கும் பெருமை, தொன்றுதொட்டு இன்று வரைக்கும், இந்தியாவுக்குரிய ஓர் தனிச் சிறப்பாகும். சங்கரர், ராமானுஜர், நாயன்மார்கள், ஆழ்வார்கள் அவ்வித நெருக்கடி காலங்களில் தோன்றியவர்களே. நாமுமின்று அதேபோல தலைமையான நெருக்கடி காலத்தில் வாழுகிறோம். இச்சந்தர்ப்பத்திலே ஓர் மகத்தான தேவையைப் பூர்த்தி செய்ய, பாரதமாதா பல அவதார புருஷர்களையும் மகாத்மாக்களையும் ஈன்றுளளாள். இன்றைய பாரமார்த்திக விண்ணில் அதிக பிரகாசத்துடன் ஜொலிக்கும் நட்சத்திரங்களில், கிருஷ்ணபாய் குருவாகச் சரண்புகுந்த சுவாமி ராமதாசரும் ஒருவர். அவரது பக்திப் பிரவாகம் தென் கன்னடத்தில் தோன்றி, காவிரி ஆற்றின் புது வெள்ளம்போல நாற்றிசையிலும் பாவியுள்ளது. சுவாமிகள் தம்மை நோக்கி, "பகவானுடைய திருநாமமே உங்களுடைய பிறவிப்பிணிக்கு இக்கலியுகத்தில் கைகண்டமருந்து. இதற்குப் பத்தியமொன்றும் கிடையாது. சடங்கோ, சாதனமோ வேண்டியதில்லை. இந்தச் சஞ்சீவி மீண்டிங்கு வந்து விளைப்பிறவி நேராக ஆனந்த வாழ்வில் நிலைபெறச் செய்கிறது. இது சொந்த அநுபவத்தில் யான் கண்ட உண்மை" என்று உபதேசம் செய்கிறார். "இந்தப்பெரியார் உண்மையில் ஆஞ்சநேயரின் அவதாரமே" என்று பக்தருலகம் வியக்கும்படி விளங்குகிறார் இந்த ராஜவைத்தியர்.

### ஞானப் பேறு

அம்மையாரின் பெயருக்கிணங்க பகவானது அவதாரங்களில் கிருஷ்ணாவதாரமே அவரது பக்திக்கனலைக் கொழுந்துவிட்டு எரியச் செய்தது. ஆனால் அவரது நாமங்களில் அவர் உள்ளத்தைக் கவர்ந்தது ஸ்ரீராமநாமம். இவ்விரு தத்துவங்களும் தாம் குருவாய் ஏற்றுக்கொண்ட பெரியாரின் வாழ்வில் ஒருமிக்கப் பொருந்தி இருந்ததை அநுபவத்தில் கண்டு மகிழ்ந்தார். தம்மை அன்புடலாகவும் தமது குருதேவனை உயிராகவும் கருதினார்.

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)



அன்னை கிருஷ்ணபாய்

## காங்கிரஸ் அரசாங்க முயற்சிக்கு உலை

சிறையிலுள்ள கைதிகளுக்குக் கையினால் நூல் நூற்கவும் நெய்யவும் கற்றுக்கொடுப்பதற்காகக் காங்கிரஸ் அரசாங்கம் நியமித்திருந்த எல்லா ஆசிரியர்களையும் நீக்கி விடும்படி பீஹார் மாகாணச் சிறைப்பகுதி இன்ஸ்பெக்டர் ஜெனரல் எல்லாச் சிறைச் சுப்பிரிண்டுகளுக்கும் உத்தரவு பிறப்பித்திருக்கிறதாகத் தெரிகிறது.

இந்த உத்தரவுக் கிணங்க மேற்படி ஆசிரியர்களுக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்டிருப்பதாகவும் இம்மாதம் 30-ந் திகதியோடு அவர்கள் வேலையை விட்டுப் போய்விடவேண்டுமெனக் கூறப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

இதே மாதிரிப் போனவருஷம் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாயினும், அப்பால் அது நீக்கப்பட்டது.

## இலங்கையிலுள்ள ஜப்பானியர்கள்

### பெண்களும் குழந்தைகளும் பயணம்

கொழும்பில்வசிக்கும் ஏறக்குறைய 30 ஜப்பானிய வாசிகள் சென்ற வெள்ளிக்கிழமை காலை "ஹாகோன் மாரு" என்னும் ஜப்பானியகப்பலிற் பிரயாணமாயினர். அவர்களில் ஸ்திரீகளும் குழந்தைகளுமே அதிகமாக இருந்தனர். வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அக்கப்பல் தூரக்கிழக்கிற்குப் புறப்படவிருந்தது.

"ஹாகோன்மாரு" வெள்ளிக்கிழமை பம்பாயிலிருந்து 63 பிரயாணிகளோடு வந்து சேர்ந்தது. அவர்கள் எல்லோரும் ஜப்பானியர்கள். அவர்களில் இந்தியாவிலுள்ள பல ஜப்பானிய சமுதாயங்களின் உத்தியோகஸ்தர்களும் அவர்களுடைய மனைவி மார்களும் குழந்தைகளும் இருந்தனர்.

சிங்கப்பூரில் வசிக்கக்கூடிய பல யாழ்ப்பாணத் தமிழர்களும் கொழும்பில் அக் கப்பலில் ஏறிக்கொண்டனர்.

கப்பல் வந்து சேர்ந்தவுடன் பிரதம துறைமுக அதிகாரி பாதுகாப்புச் சட்டப்படி ஓர் உத்தரவிட்டார். அவருடைய உத்தரவில்லாமல் ஜப்பானியக் கப்பலுக்குத் தண்ணீர் அல்லது வேறு சாமான்கள் உதவுவதும் அக் கப்பலைச் செப்பனிடுவதும் கூடாதென அவ்வுத்தரவு கூறியது.

## பெற்றோல் விலை உயரலாம்

### கட்டுப்பாட்டுத் திட்டத்தின் பலன்

பெற்றோல் கட்டுப்பாட்டை எப்பொழுது ஆரம்பிப்பதென்பதுபற்றி ஸ்தல ஸ்தாபன மந்திரிசபை ஆலோசனை செய்வதாக அறியப்படுகிறது. இதற்கிடையில் பெற்றோல் கட்டுப்பாட்டை அநுஷ்டானத்திற்குக் கொண்டுவருவதற்கும் பெற்றோல் உபயோகிப்பவர்களுக்குக் கூப்பன்கள் வழங்குவதற்குமான ஏற்பாடுகளைப் பெற்றோல் கட்டுப்பாட்டுப் பகுதி கவனித்து வருகிறது.

உத்தேசிக்கப்பட்டிருக்கும் பெற்றோல் கட்டுப்பாட்டின் கீழ் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் பெற்றோல்விலை சம்பந்தமான சில விஷயங்கள் தொழில் மந்திரியாலும் போக்கிஷக் காரியதரிசியாலும் பரிசிலனை செய்யப்படுகின்றன.

எந்தச் சமயத்திலும் பெற்றோல் விலையைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியமில்லையென்று கருதப்படுகிறது. பெற்றோல் கட்டுப்பாட்டை அநுஷ்டானத்துக்குக் கொண்டுவருவதால் பெற்றோல் கொம்பனிகளின் வருமானத்தில் கஷ்டமேற்படுமென்பது வெளிப்படை. இந்த கஷ்டத்தை எந்தவிதத்திற் கணக்கிடுவதென்பது பற்றி ஆலோசிக்கப்படுவதாக அறியப்படுகிறது.

பெற்றோல் கட்டுப்பாட்டை அநுஷ்டானத்துக்குக்கொண்டுவரும் போது, பெற்றோல் கொம்பனிகளுக்கு கஷ்டமேற்படாமற் பாதுகாப்பதற்காகப் பெற்றோல்விலை உயர்த்தப்படலாமென்றும் அறியப்படுகிறது.

## இந்தியச் செய்திகள்

### கவிதாகூரின் ஞாபகச் சின்னம்

மிஸ்டர் பேர்னுட் ஷோவின் யோசனைக்கிணங்கக் கவியரசர் தாகூரின் உருவப்படங்களை லண்டனிலுள்ள தேசிய ஓவியக்காட்சிச்சாலையில் தொங்கவிடுவதற்கு அந்த ஸ்தாபனத்தின் டைரக்டர் சம்மதித்து விட்டார். அந்தப்படங்கள் ஸேர். வில்லியம் ரோதென்ஸ்டீன் ஸேர். மூயர்ஹெட் ஆகியஇருவராலும் வரையப்பட்டவை.

### ஸ்ரீ புலாபாய்

சிறையில் தேக அசௌக்கியப்பட்டிருந்த ஸ்ரீ புலாபாய் தேசாய் வைத்தியப் பரிசோதனைக்காக லண்டன் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டிருக்கிறார். ஆஸ்பத்திரியில் அவர் விசேஷ வார்ட்டில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

### இந்தியாவுக்கு அபாயம்

பஞ்சாப் விமானப் படையெடுப்புத் தடுப்புப் பிரதம அதிகாரி செப்டெம்பர் ௴ 11-ந் திகதி நடந்த பொதுக் கூட்டமொன்றிற் பேசும்போது சாரானில் பிருத்தானிய அரசாங்கம் காலாகாலத்தில் நடவடிக்கை எடுத்தால் அங்குவிரோதிகளின் கை ஓங்கியிருக்கிறதாயினும், இந்தியாமீது விமானத் தாக்குதல் நடக்கலாம் என்ற பயம் இன்னும் நீங்கவில்லை என்றும், ஜனங்களிடையே பயத்தை உண்டுபண்ணுவதற்காகத் தாம் இங்ஙனம் கூறவில்லையென்றும் விமானப் படையெடுப்பு எதிர்ப்புப் பயிற்சியை அவர்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென்பதற்காகவே சொல்லுவதாகவும் தெரிவித்தார்.

### சில காங்கிரஸ் காரர்கள் முயற்சி

ஒரிஸ்ஸாவில் மற்றக் கக்ஷியினரோடு கலந்து புதிய மந்திரி சபை அமைக்கச் சட்டசபைக் காங்கிரஸ் கக்ஷியினரில் 8பேர் முயற்சிசெய்வதாகத் தெரிகிறது. இவர்கள் தனிக் கக்ஷியினராகப் பிரியவும் உத்தேசித்திருக்கிறார்கள்.

### வார்த்தை எதற்கு?

மகாத்மாவைப் பத்திரிகை நிருபர் கண்டு மிஸ்டர் சேர்ச்சில் பிரசங்கத்தைப்பற்றிக் கேட்டபோது அவர், "நான் அதைப்பற்றிப் பேசுவதை விட மௌனஞ் சாதிப்பதே சரியான காரியம் என மனப் பூர்வமாக நினைக்கிறேன்" என்றார். சாந்திஜி நிருபர் கேட்ட ஒரு கேள்விக்கும் பதில் சொல்லவில்லை.

மிக முக்கியமான பொருத்தமான கேள்விகளை நான் கேட்டும் தாங்கள் பதில் சொல்லவில்லை. உண்மையிலேயே இந்தச் சமயத்தில் தாங்கள் மௌனமாக இருப்பதால் இந்திய சுயேச்சை இயக்கத்து நன்மை விளையுமென நினைக்கின்றீர்களா என நிருபர் கேட்டதற்கு மகாத்மா கூறியதாவது:-

"நான் அவ்விதந்தான் நினைக்கிறேன். இல்லாவிட்டால், ஒருவரும் என்னைக் கண்டு கேட்குமுன்னரே ஓர் அறிக்கை வெளியிட்டிருப்பேன். உண்மையாகவே நான் வாய்விட்டுப் பேசுவதால் பயனில்லையென்று கருதுகிறேன். இந்தச் சந்தர்ப்பத்தில் வாளாவிருந்தால் அதிக நன்மை கிடைக்கும். வாய்ப் பேச்சில் வீரங்காட்டிப் பயனில்லை. காரியந்தான் வேண்டும். என் காரியம் என்னவென இந்தியா, ஏன் உலகமே அறிந்திருக்கிறது."

## எது தமிழ்?

(சாவடி சா. கூத்தநயினர் பிள்ளை)

ஒருவன், தான் எண்ணியதைப் பிறருக்கு விளங்கும்படி செய்ய, அவன் ஒலிக்கும் ஒலியாலும், அவ்வொலியினதாக ஆக்கப்படும் வடிவெழுத்துகளாலும் இயலும். இதுவே உலகத்திலுள்ள சகல மொழிகளின் இயல்பாகும். பேச ஆரம்பித்த பின்னரே, பேசுவது சரியா, தப்பா என்று பார்க்க ஓர் இலக்கணம் வகுக்கப்பட்டது. சிறு "உய்ய் உய்ய்" என்னும் ஒலியினைக் கேட்டால் சென்னையிலுள்ளோர் தயிர் விற்பவர் ஒலிக்கும் ஒலி எனத் தேர்வர். மற்றவரோ இவ்வொலியின் பொருள் தெரியாது திகைப்பர்: நெல்லையிலோ, "தயிரோ, தயிர்" என்பர். பிறமொழிகளில் காணக் கிடையாத "ழ"கரம் என்னும் சிறப்பெழுத்தைத் தமிழ்மொழி யொன்றிலேதான் காணமுடியும். இந்த 'ழ'கரத்தைத் தில்லையிலுள்ளார் 'ஷ'கரமாக்கி வழங்குகின்றனர். மார்கழித் திருவிழா, வியாழக்கிழமை வருகிறது என்று சொல்லுவதற்குப் பதிலாக, 'மார்கஷித்திருவிஷா வியாஷக்கிஷமை வருகிறது' என்றுசொல்லக் கேட்கலாம். தஞ்சை வாசியோ எண்ணிக்கை எண்ணும்போது ஆறுபது, எழுபது, எம்பது, ஏம்பது தொன்று என்று இவ்வாறாய் எண்ணுகின்றனர். 'இழுத்துக் கொண்டு போனான்' என்பது, சென்னையில் 'இஸ்துகினு பூட்டான்' என்று வழங்கப்படுகிறது. 'அப்புறம் பார்த்துக் கொள்வோம்' என்னும் நெல்லைச் சொல், யாழ்ப்பாணத்தில் 'பெயர்ந்து பார்த்துக்கொள்வோம்' என்றும், 'முன் பேசினது உமக்குத் தெரியலேயோ காணும்' என்றும் வழங்கப்பட்டு வருகின்றன. ஆகவே எது தமிழ்? தமிழிற் பேசலே தமிழ்.

மத்திய ஆசியாவிலிருந்து, இந்தியாவிற்கு வந்து, இங்குள்ள காட்டு மனிதராய்ச் சுற்றிக்கொண்டிருந்த புராதன இந்தியரைத் துரத்தி, சிந்துநதிச் சமவெளியிலும் குடியேறினர் தமிழர், என்பர் ஓர் சாரார். கடலால் கொள்ளப்பட்ட 'இலேமோரியா' என்னுமிடத்திலிருந்து இங்கு வந்தவரே தமிழர் என்பவருமுளர். எது எவ்வாறாயினும், தமிழர், இத்தேயத்தவர்; சுதேசியர். அவர்தம் மொழி தமிழ். தமிழ் என்ற ஒரே மொழிதான். இத்தமிழரை வடகிழக்குக் கணவாய்களின் வழியாக வந்த 'தூரானியர்' என்னும் ஓர்ஜாதியார் வென்று துரத்தினர். சில தமிழர், தூரானியருடனே தங்கினர்; சிலர் விந்திய மலையின் கீழ்த்திசையிலும், கடற்கரைப் பக்கமாயுள்ள சமவெளிகளிலும், தென்னிந்தியாவிலுமாகப் போய்க் குடியேறினர். இத் தமிழர் வெவ்வேறிடங்களிற் சென்று, நிலையாய்க் குடிபுகுந்த பின்னர், இவர்கள் பேசிய பாஷை, சிறிது சிறிதாக மாறுதலடைந்தது. ஒரே மூல பாஷையையே பலவேறு விதமாகப் பேசத் தொடங்கினர். இவ்விதம் தமிழின்வழி மொழியாகித் தனித்தனி இயங்கப் புகுந்தனவற்றுள் தலை சிறந்தது, தெலுங்கு, கன்னடம், துளுவம், மலையாளம் ஆகிய நான்குமாம். இதனையே கொடுமலையாளக் குடியிருப்புடையோனாகிய மனோன்மணீய ஆசிரியர் சுந்தரம்பிள்ளை தமிழ்த் தெய்வ வணக்கத்தினுள்,

'பல்லுயிரும் பலவுலகும் படைத்
தளித்துத் துடைக்கினும் ஓர்
எல்லையறு பரம்பொருள்முன்
னிருந்தபடி யிருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்குங் கவின்
மலையாளமும் துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே
யொன்று பல வாயிடினும்
ஆரியம் போலுலக வழக்கழிந்
தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத்திறம் வியந்து செயல்
மறந்து வாழ்த்துதுமே'.....

என்று கூறியிருக்கின்றார். தமிழர் தூரானியரால் வென்று அடக்கப்பட்டபோது, சில தூரானியச் சொற்கள் தமிழ் மொழியிற் கலந்திருத்தலும் இயல்பு. பின், தூரானியரை வடக்கிலிருந்து வந்த ஆரியர் வென்றனர். அச்சமயம் சில தூரானியர் தெற்கே வந்து தமிழருடன் கலந்து வாழ்ந்தனர். அது சமயமும் சில தூரானியச் சொற்கள் தமிழில் இடம் பெற்றிருப்பினு மிருக்கலாம்.

ஐரோப்பாவிலுள்ள 'ஸ்காந்திநேவியம்' என்னுமிடத்திலிருந்து புறப்பட்ட ஆரியர் என்னும் ஓர் ஜாதியார், பலபக்கங்களுக்கும் சென்று தங்கினர். இவ்வாரியரில் ஒரு பிரிவினர் 'துருக்கிஸ்தானத்தில்' தங்கியிருந்து பின்னர் இந்தியாவிற்கு வந்து தூரானியரை வென்றனர்.

ஆரியர் பல்வேறிடங்கட்குப் பிரிந்து போனமையால் இவர் தம்மொழியாகிய ஆரியமும் பலவேறு வகையாயின. அவையே "இலத்தீன், கிரீக், சமஸ்கிருதம், ஜெர்மானியம், எபிரேயம்" என்பனவாம்...இந்தியாவுக்கு வந்த ஆரியர், சமஸ்கிருதம் பயின்றவரே. இவ்வாரியர் இங்கு வருமுன்னரே தமிழரின் நாகரிகம், மிக்க உன்னத நிலையிலிருந்தது, இவர்கள் உழவுத் தொழிலில் மிகத் தேர்ச்சி பெற்றவர். அதிகாரம் செலுத்தும் முறையும் நன்கு அறிந்திருந்தமையால், இவர்கள் தமக்குள்ளேயே தலைவர்களை ஏற்படுத்திக்கொண்டு அமைதியுடனும், நீதியுடனும் அரசியலை நடாத்தினர். இக்காலத்தில் தேசப்பற்றும் பாஷைப்பற்றும் ஏற்படவே தமிழ்நாடும், தமிழும் ஓங்கி வளர்ந்தன. தமிழர் படைக்கலப் பயிற்சியில் கைதேர்ந்து பற்பலவிடங்கட்கு எல்லாம் சென்று வாணிபம் செய்து, சிங்களம், புட்பகம், சாவகமாகிய தீவுபலவும் தமதாக்கி ஆண்டனர்.

காவிரிப்பூம் பட்டினத்திற் கரிகாற் சோழன் அரசாண்டபோது, பல்வேறு மொழிகள்வழங்கிய பல்வேறு தேயத்தாரும் இப்பட்டினத்திற்கு வியாபார நிமித்தம் வந்து தத்தம் பொருள்களைக் கொடுத்தும், இங்குள்ள முத்து, பவளம், சந்தனம் ஆகியவைகளைக் கொண்டும் போனமை எல்லாம், சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வரையப்பட்ட பட்டினப் பாலையிலும், அதற்குச் சிறிது பின்பு இயற்றிய சிலப்பதிகாரத்திலும், விளக்கமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றது. 'கிரீஸ்' முதலிய இடங்களிலிருந்தங்கநேர்ந்த சிற்பிகளைத் தமிழ் மன்னர்கள் வரவழைத்து ஓவியக் கலையையும், சிற்பக்கலையையும் வளர்த்து வந்தனர் என்பது முல்லைப்பாட்டால் நன்கு அறியலாம்.

ஆகவே தமிழர், அரசியல், வாணிபம், சிற்பம் ஆகிய பலதுறைகளிலும்மேம்பட்டுச் சிறந்த நாகரிகத்துடன் விளங்கினர். வியாபாரநிமித்தம் பலவேறு மொழி பேசுவோர்களிடம், தமிழர், கலந்து பேசிட்டமையால், தமிழ்மொழி பிற மொழிகளுடன் கலத்தல், இயல்பு...இவ்வாறு மொழிகள் ஒன்றோடு ஒன்று, கலக்கப் பெறுவதற்கு அவற்றை வழங்கும் மக்களின் நாகரிகமே வழியாயிருத்தலால், நாகரிகம் வாய்ந்த எந்த மொழியும் பிறமொழிக் கலப்பில்லாமல் இருத்தல் இடலவே இயலாது. இதுபற்றியே, இன்றும் பிறமொழிச் சொற்கள், தமிழ்ச் சொற்களுடன் கலந்து காணப்படுகின்றன. இங்ஙனம் காணப்படுதல் தமிழ்மொழியின் நாகரிகச் சிறப்பினையும், அதன் வளப்பத்தினையும் காட்டுகின்றதே யல்லாமல், அதற்கு, அது, தாழ்வாதலைக் குறிக்கின்றதில்லை.

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் விஷு ஸ்ரீ புரட்டாதி மீ க௨ வியாழக்கிழமை


## ஈரூன் நாட்டிற் குழப்பம்

பாரசீகம் என இந்துக்கள் வழங்கி வந்த பார்சியா நாடே இப்பொழுது ஈரூன் என்று சொல்லப்படலாயிற்று. அந்த ஈரூன் நாட்டைப் பரிபாலிக்கும் அரசனுக்கு 'ஷா' என்று பட்டமுண்டு; அது இஸ்லாமிய நாடாகும். ஈரூன் நாட்டிலே இப்பொழுது ஜர்மனியர் அதிகமாகச் சஞ்சரிக்கின்றனரென்றும், அப்படி அதிகமாக ஜர்மனியரைச் சஞ்சரிக்க விடுத்தால் அந்நாட்டின் சமாதானத்திற்குப் பங்கம் நேரிடக்கூடுமென்றும், ஆனதால் ஜர்மனியரை அந்நாட்டிலிருந்து அகற்றிவிடுதல் ஆவசியகமென்றும் பிருத்தானியர் ஈரூன்நாட்டு அரசராகிய ஷாவிற்குச் சில வாரங்கட்கு முன்னர்த் தெரிவித்திருந்தனர். ஆனல் ஷா பிருத்தானியருடைய எச்சரிக்கையைக் கேட்டு நடப்பார் போல் நடித்தாரே யொழிய உண்மையில் அப்படி ஏதும் முயற்சி செய்திலரெனச் சொல்லப்பட்டது. ஷா புறத்தே தாம் பொது நிலைமையைக் கைக்கொள்வார் போற் காட்டி அகத்தே ஜர்மனியருக்குச் சார்பாக ஒழுகினரென்றுங் கூறப்படுகின்றது. ஒரு பக்கத்தில் ஜர்மனியர் நெருக்க மற்றப்பக்கத்தில் ருஷியரும் பிருத்தானியரும் நெருக்கச் சில நாட்களாக அந்த ஷா, இருதலைக் கொள்ளியினுள் எறும்பொத்து இடர்ப்பட்டமையை அறிவோம்; அவ்வளவோடு நில்லாமல் ஷாவிற்கும் அவருடைய பிரசைகளுக்கு மிடையே வேற்றுமை உண்டானதோ உண்டாக்கப்பட்டதோ என்ற வதந்தியும் பிறக்கலாயிற்று.

இப்பொழுது அந்த ஷா தமக்குச் சுகவீனமென்று காரணங்காட்டிச் சிம்மாசனத்தைத் துறந்தாரென்றும் அவருடைய மகனே உடனுக்குடன் அந்த இராச்சிய பாரத்தை ஏற்றுக் கொண்டாரென்றுந் தந்திச் சமாசார வாயிலாக அறியக்கிடக்கின்றது. ஷாவிற்கு இப்பொழுது வயசு 67 ஆகும். அவர் பழைய அரச பரம்பரையிலுள்ளவரல்லரென்றும் சாமான்ய போர் வீரனுக இருந்தவரென்றும் முந்திய ஷாவிற்கு விரோதமாகக் கலகஞ் செய்து அந்த அரசனைத் தாந்திவிட்டுத் தாம் சிம்மாசனமேறித் தமக்குத் தாமாகவே முடிசூட்டிப் பாரசீகநாட்டை இதுகாறும் ஆண்டுவந்தனரென்றும் அவருடைய வரலாறு வெளிவருகின்றது. அவருடைய நாமம் றிஸாஷா பாலவி. இப்பொழுது இராச்சியத்தை ஏற்றிருக்கும் மகனுடைய வயசு 22. இவருடைய பெயர் ஷாபூர் மகமது றிஸா; இவர் எகிப்துநாட்டு அரசனின் சகோதரியை மணஞ் செய்துள்ளார்.

ஷாபாலவி தம்முடைய சிம்மாசனத்தைத் துறத்தற்குமுன் அங்குள்ள பிருத்தானிய மந்திரியின் நோக்கத்தை யறிந்து அவருடைய சம்மதத்தோடு தான் தமது இராச்சியத்தைத் துறந்தாரெனச் சொல்லப்படுகின்றது. இப்பொழுது ஈரூன் நாட்டுள் பிருத்தானிய ருஷிய சைநியங்கள் படையெடுத்துச் செல்லுமெனவுஞ் சொல்லப்படுகின்றது. விரைவில் ஈரூன் நாடு பெரும் யுத்தத்திற்கும் கலகங்களுக்குமாகிய நாடாகுமென்பதை எவரும் சொல்லாமலே காத்திருக்க வேண்டியதாகும். அயிரோப்பாக் கண்டத்தில் ஆரம்பித்த யுத்தம் பரந்து பரந்து இப்பொழுது ஆசியாக் கண்டத்துள்ளுஞ் சில தேசங்களுட் புகுந்துவிட்டது. சிறிய நாடுகளெல்லாம் பெரிய நத்துவ ராச்சியங்களுக்கு இரையாகின்றன. ஈரூன் விஷயத்திலே ஹிட்லரும் ருஷியரும் என்ன செய்வார்களென்பதைத் தாம் இனிமேல் நாங்கள் எதிர்பார்க்க வேண்டியது. ஷாபாலவி எந்த நாட்டிற் போய் ஒதுங்குகின்றாரோ என்பதும் சிந்திக்கத்தக்கது.

## அன்னை கிருஷ்ணபாய் ஜயந்தி

அன்னை கிருஷ்ணபாயின் 39-வது பிறந்த தின விழா இம்மாதம் 20-ந் திகதி சனிக்கிழமை மாலை 4மணி தொடக்கம் யாழ்ப்பாணம் மணிக்கூட்டுக்கோபுரவீதியிலுள்ள 19-ம் இலக்க இல்லத்தில் கொண்டாடப்படும். 4 மணிக்கு நாமசங்கீர்த்தனமும் பக்தியை விளக்கும் பாட்டுக்களும் 5 மணிக்கு ஸ்ரீ டக்டர் B. C. தாஸ் குப்தா, ஸ்ரீமதிபண்டிதை இ.பத்மாசனி யம்மாள் ஆதியோர் சொற்பொழிவுகள், 5–45க்கு ஸ்ரீ N. B. K. நம்பியாரால் ஸ்ரீ லலித சகஸ்ரநாம ஸ்தோத்திரம், 6-15க்கு சங்கீர்த்தனமும் ஆராதனையும், 7-30க்கு பிரசாதம் வழங்கல் ஆதியனவும் நடைபெறும்.

## தாகூர் ஞாபகக் கூட்டம்

இக் கூட்டம், யாழ்ப்பாணம் இலங்கை இந்தியர் மகாநாடு, யாழ்ப்பாணம் கலாநிலையம், யாழ்ப்பாணச் சங்கம், யாழ்ப்பாணச் சட்டநூல் வல்லுநர்சங்கம், வடமாகாண ஆசிரியர் சங்கம், யாழ்ப்பாணம் வாலிபர் மகாநாடு, யாழ்ப்பாணம் சிறீலங்கா வாலிபர்சங்கம் ஆகியவைகளின் ஆதரவில் இம்மாதம் 20ந் திகதி சனிக்கிழமை மாலை 5½ மணிக்கு யாழ்ப்பாணம் "டவுண்ஹால்"ல இலங்கையில் இந்திய அரசாங்க ஏஜெண்டாக உள்ள T. N. S. இராகவன், M. A. T. C. S. அவர்கள் தலைமையில் நடைபெறும்.

டக்டர் இரவீந்திரநாத் தாகூர் அவர்கள் சேவையும் அவர் உலகுக்கு உதவியவையும் என்பதுபற்றி திருவாளர்கள் M. பிரசாத் C. C. S. (யாழ்ப்பாணம் மாகாணத் தலைவர்) C. குமாரசுவாமி C. C. S. (டிஸ்திறிக் நீதிபதி) R. சிவகுருநாதர் (பட்டினசபைத் தலைவர்) S. A. பேரின்பநாயகம் B. A. (வடமாகாண ஆசிரியர் சங்கத்தலைவர்) ஐஸாக் பொன்னையபலம் B. A. (யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி) ஆகியோர் சொற்பொழிவுகள் நிகழ்த்துவர். ஸ்ரீமதி ந. மகேஸ்வரிதேவி வங்காளி பாஷையில் டக்டர் தாகூரின் பாட்டுக்களைப் பாடுவார்.

விஸ்வபாரதிக்காக வெள்ளிக் காணயஞ் சேர்க்கப்படும்.

## இவ்வார இறுதியில் ஒத்திகைகள்

### நீலப்படையும் மஞ்சட் படையும் கலந்துகொள்ளும்

இவ்வார முடிவில் இராணுவப் பயிற்சிகள் பிரமாண்டமான முறையில் நடைபெறும்.

இப்பயிற்சி வெள்ளிக்கிழமை காலை ஆரம்பித்து ஞாயிற்றுக்கிழமை நடுப்பகலோடு முடிவுறும். இலங்கைப் பாதுகாப்புப் படையிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட மஞ்சட்படையொன்றும் நீலப்படையொன்றும் இப்பயிற்சிகளிற் கலந்துகொள்ளும்.

பிரதேசங்களை ஒரு படை விரைவிற் கைப்பற்றுதலும் மற்றொரு படை பின்னடைவதும் இப்பயிற்சி அப்சங்களின் ஒன்றாகும்.

இன்னும் பயிற்சிப் பிரதேசத்தில் மும்முரமான சேனையின் நடமாட்டியிருக்கும்போது அந்தப் பிரதேசத்தின் ஊருடாக ஏற்படுகளைப் பரிசோதிப்பதும் இப்பயிற்சியின் மற்றொரு நோக்கமாகும்.

இரவில் காவி ரோட்டின் வழியாகச் செல்லும் கார்கள் அநேகமாக நிறுத்தப்படலாம். ஏனெனின், அவை இத்திட்டத்தில் சம்பந்தங்கொள்ளவில்லையென்பதை நிச்சயிப்பதற்காக அவ்வாறு செய்யப்படும்.

# உலகம்பலவிதக்கதை

### "அவர் நல்லவர்"

"ஆச்சி, ஆச்சி' உறங்கிவிட்டீர்களா" என்று மெல்லக் கூப்பிட்டாள் அமிர்தாம்பிகை; "ஆச்சி உறங்கியிருக்க வேணும்; நித்திரைக்குப் பங்கஞ் செய்யாதீர்கள் அக்கா" என்றுள் சுந்தரம்; "சுந்தரம், நீ உறங்கு, நானும் சற்று உறங்கப் போகிறேன்" என்று தமக்கை சொல்ல, "அக்கா, நான் உங்களைக் குழப்பவில்லை, நீங்கள் நித்திரை செய்யுங்கள்; எனக்கு உறக்கம் வரவில்லை; என் நித்திரை கலைந்து விட்டது" என்றுள் தங்கை. "கண்ணே, சொல்லுகிறேன் என்று கவலைப்படாதே, குறைநினையாதே, நாங்கள் இரண்டு பேரும் ஒரு வைராக்கியத்தினுல், வீடு வாசலை விட்டு, இனசனத்தை விட்டு, பெற்றோர் உற்றாரை விட்டு, ஊர் விட்டு, தேசம் விட்டுப் புறப்பட்டு வந்து விட்டோம்; அந்த நேரத்தில் இருந்த மன வைராக்கியத்தினுல் நாங்கள் செய்தது பிழையென அப்பொழுது புலப்படவில்லை; எங்களைப் பற்றி ஊரில் என்ன அவதூறு சொல்லுகிருர்களோ, தகப்பனுர் எவ்வளவு கவலைப்படுகிருரோ, தாயார் என்னவிதமாக மனம் வருந்துகிருரோ ஒன்றும் தெரியவில்லை; இந்த இளம் வயசில் நாங்கள் எவ்வளவு காலத்திற்கு இப்படித் தேசசஞ்சாரிகளாகத் திரிய முடியும்? இன்று பகல் நேர்ந்த ஆபத்தை முதல் தெய்வம் இரண்டாவதாக அந்தப் புண்ணியவானல்லவா நீக்கி விட்டதென வேண்டும்; தங்காய், பொன்னைப் பறிகொடுக்கலாம், பொருளைப் பறிகொடுக்கலாம், ஆடையாபரணங்களை இழந்துவிடலாம்; ஆனுல் எங்கள் மானத்திற்கு ஏதும் பங்கம் வந்தால் பின்னர் நாங்கள் உயிருடன் இருக்கலாமா? ஊருக்கு மீண்டுபோகலாமா? எங்கள் நாட்டுப் பெண்கள் தம் உயிரைக் காட்டிலும் மானமே பெரிதெனப் பாதுகாப்பவர்களல்லரோ? மானமிழந்த பின் வாழாமை முன்னிதே யென்று சொல்லுவார்கள்; இப்பொழுதும் எங்கள் மனக் காவலல்லவா எங்களை மரியாதையுடன் காத்து வருவது; ஆனதால், என் கண்ணே, சுந்தரம், நாங்கள் சிந்தையை அது நினைத்தபடி செலலவிட வொண்ணுது..." என்று தன் பக்கலிற் படுத்துக்கிடந்த தங்கைக்குத் தமக்கை இதமுறச் சொன்னுள். இவற்றைக் கேட்ட சுந்தராம்பிகை திடுக்குற்றுள், ஏங்கினுள், மனம் வருந்தினுள்; கண் கலங்கப் பெற்றுள்; "அக்கா, என் அருமையான அக்கா, நான் உங்களுக்குத் துரோகியானேன்! அந்த வாலிபர்மேற் கொண்ட எண்ணத்தை இந்தச் சணமே மறந்தேன்! மறந்தேன்!! என் பிழையைப் பொறுத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லித் தன் தமக்கையின் கையைத் தன் இரு கைகளாலும் எடுத்துத் தன் கண்களில் ஒற்றிப் பின் முத்தமிட்டாள் சுந்தராம்பிகை. அமிர்தாம்பிகையின் கரம் சுந்தராம்பிகையின் கண்ணீரால் கழுவுண்டது; தான் சொன்ன சொற்கள் தனது தங்கையின் உள்ளத்தைக் கவலைக் கடலில் ஆழ்த்திவிட்டன வென்பதை அமிர்தாம்பிகை அப்பொழுது தான் உணர்ந்தாள். "கண்ணே, மனங் கலங்காதே, என் மனத்தைக் கலங்க வையாதே; நான் சிறிது யோசியாமல் இப்பொழுது சொன்னவைகளைப் பொறுத்துக் கொள்; நீ அரிய உடன்பிறப்பே, உன் மனத்துயரத்தை உள்ளபடி அறியாமற் பெண்புத்தியினுல் ஏதோ உன் மனம் நோகச் சொல்லிவிட்டேன்; எனக்கு நிச்சயித்திருந்த மைத்துனரை, பெற்றோர் உனக்கு விவாகஞ் செய்யத் துணிந்தனரென்ற காரணத்தால் அப்பெற்றோரையும் உற்றாரையும் வெறுத்து என்னையுந் துணையாகக் கொண்டு பரதேசம் புறப்பட்ட அரிய தங்கையாகிய உன் மீது நான் குறைகூறுவேனு, சந்தேகப்படுவேனு, நான் செய்த பிழையைப் பொறுத்துக்கொள்; கண்ணே, நீர் அடித்து நீர்விலகப் போவதில்லை' என்று சொல்லி அமிர்தாம்பிகை தன் தங்கையைத் தேற்றினுள். பின்னரும் அமிர்தம் தன் தங்கையைப் பார்த்து, "கண்ணே, அந்த வாலிபருடைய எண்ணத்தை மறந்தேன்" என்று நீ சொன்னது என் மனத்தை வருத்துகிறது; அவர் நல்லவர்; உத்தம குடியிற் பிறந்தவர் போற் காணப்படுகிறுர். அவரை நாம் புறக்கணிக்க வொண்ணுது; வெறுக்க வொண்ணுது, அப்படிச் செய்தால் செய்நன்றி கொன்ற துரோகிகளாவோம்; அவர் உனக்கு மணாளனுக வரவேண்டுமென்று தெய்வத்தைப் பிரார்த்திக்கின்றேன்; ஆனுல் நாம் ஏதனையும் பெற்றோர் பெரியாரின் சம்மதமில்லாமல் நிச்சயித்துக் கொள்ளக் கூடாது; இதனைத் தான் நான் முதிச் சொல்லத் தொடங்கினேன்; என் சொல்லினுல் நீ என் வார்த்தைகளை விபரீதமாக நினைத்துக் கவலைப்பட்டுவிட்டாய்" என்று பின்னரும் ஆறுதலாகச் சொன்னுள். தமக்கை பிறகு கூறிய சொற்களால் பூரண சமாதானமடைந்த தங்கை "அக்கா, எல்லாம் விதியின்படி நடக்கும்; அது சரி அக்கா, கேட்கிறேனென்று குறைநினையாதீர்கள், பெரிய அத்தானுடைய கதியென்ன" என்று கேட்க "தங்கைச்சி, அதுவும் விதியின்படிதான் நடக்கும்" என்றுள் அமிர்தம்; இங்ஙனம் பேசிக்கொண்டே இருவரும் உறங்கி விட்டார்கள்.

### 'தேடிக் கண்டன்றி மீள்வதில்லை'

கந்தசாமி முதலியாரும் தம் பிள்ளைகளை ஒவ்வொரு தலத்திலும் சென்று சென்று தேடத் தலைப்பட்டார்; சந்திக்கவில்லை; "என் மக்களை இனி எப்போதாயினுங் காண்பேனு" என்று மனமுடைந்தார். "ஆண்டவனே! உனக்கு இரக்கமில்லையா? என் பிள்ளைகளை ஒரு முறையாயினும் என் கண்ணிற் காட்டி வைக்க வொண்ணுதா? அநாதரட்சகா, கருணையங்கடலே' மணியிழந்த நாகம்போல் மனம் வாடி வருந்துகின்றேனே! பாவியேன் புதல்வியர் உயிரோடுதான் இருக்கிருர்களோ, அல்லரோ என்பதுந் தெரியவில்லையே! எல்லாமறிந்த இறைவா, என் கண்ணில் என் மக்களைக் காட்டி வைக்காவிட்டாலும், அவர்களுக்கு ஒரு ஆபத்தும் வராமற் காப்பது உன்கடன்; உலகத்திலுள்ள ஆன்ம கோடிகளுக்கெல்லாம் தந்தையும் தாயுமான தயாபரனே! நான் செய்த அபராதங்களின் பொருட்டு என்னை இத்தனை நாளும் தண்டித்து வருதல் ஆகாதா? ஏசனே, எல்லாம் உன செயல்; எனனுல ஆவது ஏதுமுண்டோ; ஆனுலும் என் பிள்ளைகளைத் தேடிக்கண்டன்றி நான் ஊருக்கு மீளப் போவதில்லை, இது சத்தியம்" என்று பலவாறு எண்ணி நிச்சயித்துக் கொண்டு பின்னரும் பல தலங்களில் தன் வேலைக்காரனுடன் சென்று சென்று பிள்ளைகளைத் தேடித்திரியலானுர்.

### "நான் கொண்ட காதல் தூயதானுல்"

அன்று சுந்தராம்பிகையைக் கண்டானே, ஆவலுடன் நோக்கினுனே, அவளுடைய குயிலினுமினிய மொழியைக் காதாரக் கேட்டானே அன்று தொடக்கம் அந்த வாலிபனும் அக்கன்னிகையின் எண்ணமாகவே காலங்கழிப்பானுயினுன்; நான் அந்த உத்தமியின மீது கொண்ட காதல் தூயதாதலென்பது மெய்யானுல், அக்கன்னிகாரத்தினமும் என்னிடத்தில் யதார்த்தமான அன்பு பூண்டுள்ளாளானுல் "காதலிருவர் கருத்தொருமித்து—ஆதரவு பட்டதே இன்பம்..." என்ற அந்த மூதாட்டி சொன்ன வாசகம் நிசமானுல் எனக்கு இல்லாளாக இசைய வேண்டியவள் அந்த நல்லாளே யென்று நியதியிருந்தால், எங்களிருவரையும் இறைவனே கூட்டி வைக்கும்; நான் எவ்விதத்திலும் அப்பெண்ணுயிரைத் தவிரவிற சந்திப்பேன" என்று நிச்சயஞ் செய்து கொண்டான்.

### அண்ணுமலையை விட்டகலுதல்

அடுத்தநாட் காலை எல்லோரும் நித்திரை விட்டெழுந்து தங்கள் தங்கள் காலைக் கடனை முடித்தார்கள்; சாமியம்மாளும் கன்னியர் இருவரும் சுவாமி தரிசனஞ் செய்யச் சென்று தரிசனம் முடித்துக்கொண்டு மடத்திற்கு மீண்டார்கள். இராமனும் அவர்களுக்குத் துணையாகப் போய்வந்தான். "மக்காள்! இந்தத் தலத்திலும் சில நாள் தங்கிவிட்டோம்; இனி நாங்கள் வேறு தலங்களையும் போய்த் தரிசிக்க வேணுமல்லவோ, உங்கள் விருப்பம் என்ன" என்று சாமியம்மாள் கேட்க அமிர்தாம்பிகை "எனக்கும் அந்நோக்கம் விருப்பம்" என்றுள்; அந்த நோக்கில் அபலே நின்ற நாமனும் அப்படிச் செய்வதுதான் நல்லதென்றுன். சுந்தரம் மௌனமாயிருந்தாள்; "ஏன, கண்ணே, உனக்கும் விருப்பந்தானே" என்று தமக்கை தங்கையைக் கேட்க "அக்கா, உங்கள் விருப்பத்தைவிடப் புறம்பாக எனக்கும் ஒரு விருப்பமுண்டோ? உங்களுக்குச் சம்மதமானுல் எனக்குஞ் சம்மதந்தானே" என்றுள். சுந்தராம்பிகைக்கு உடனே அத்தலத்தைவிட்டு நீங்கப் பிரியமில்லை; ஏன்? அந்த வாலிபனை அவள் சந்தித்த இடம் அத்தலமல்லவா; ஒருபோது அவ்வாலிபன் அடுத்த அடுத்த நாள் அங்கு மீண்டு வருதலும் கூடும் என்று அவள் நினைத்திருந்தாள். ஆனுலும் தன் தமக்கையின் எண்ணத்திற்கு மாருகச் சுந்தரம் எதனையுஞ் செய்யமாட்டாளென்பது நிசம். சில சமயத்தில் அவள் தன் தமக்கையைப் பார்த்து "அக்கா, நீங்கள்தானே எனக்குத் தாயும் தமக்கையுமாவீர்கள்" என்று பரிவுடன் சொல்வதுண்டு. அன்று பிற்பகல் எல்லோரும் அண்ணுமலைப் பெருமானை வழிபட்டுக் கொண்டு அத்தலத்தை விட்டுப் புகைரத மார்க்கமாகப் புறப்பட்டனர்.

### "தேடிப்பார்க்க வேண்டாமா"

கந்தசாமி முதலியார் வீட்டிற்கு அவருடைய மருகனுகிய சோமசுந்தரம் இடையிடையே போய் ஆக வேண்டிய கருமங்களைப் பார்த்து வருவதுண்டு; ஆனுல் மங்களத்தம்மாளுடன் சோமசுந்தரன் மாமி மருகன் என்ற காரணத்தாலோ, இல்லையேல் அவன் முந்திச் செய்த செயல்கள் தனக்கு விருப்பமில்லாமையினுலோ, நாமறியோம், நேரிற் பேசிக்கொள்வதில்லை; மருமகனுக்குத் தான் ஏதுந் தெரிவிக்க வேண்டுமேயானுல மங்களம் அங்குள்ள வேலைக்காரச் சிறுமி மூலமாகவே தெரிவித்துப் பதில் அறிந்து கொள்ளுவாள். ஒரு நாள் சோமசுந்தரன் முதலியார் வீட்டுத் தலைவாசற் புறத்துப போயிருந்த போது, வேலைக்காரச் சிறுமி அவனிருக்குமிடத்திற்கு வந்து "இந்த நாட்களில் ஐயாவின் கடிதம் ஏதும் வந்ததோ என்று அம்மா உங்களைக் கேட்கட்டாம்" என்று சொன்னுள். இதற்கிடையில் மங்களத்தம்மாளும் தலைவாசற் கதவண்டை வந்து பாதி முகந் தெரிய ஒதுங்கி நின்றுள். "இப்பொழுது சில கிழமைகளாக அவருடைய கடிதம் ஒன்றும் வரவில்லையாம் என்று போய்ச் சொல்லு" எனச் சோமசுந்தரன் சிறுமியிடஞ் சொல்ல அவள் தன் எஜமாட்டியிடம் போய்ச் சொல்லுதற்கிடையில் "கடிதத்தையுங் காணவில்லை; அவர் புறப்பட்டும் வெகுநாளாய் விட்டது; அவரைப் பற்றியும் பிள்ளைகளைப் பற்றியும் ஒன்றுமறியாமல் எத்தனை நாளைக்கு இருப்பது; இங்கே தான் ஆண் பிள்ளைகள் வேறு ஆர் இருக்கிருர்கள்; நெடுக இப்படிச் சஞ்சலப்பட்டுக் கொண்டிருக்கலாமோ? நீங்களாவது ஒருமுறை புறப்பட்டுத் தேடிப்பார்த்து வந்தால் நல்லது; என்னவோ உங்கள் பிரியம்..." என்று கிழக்குப் பக்கமாக இருந்த மருமகனுக்கு மேற்கே பார்த்தபடி மங்களம் முறையிட்டுச் சொன்னுள். "தேடிப் பார்க்கத்தான் வேண்டும்; நானும் அதை யிட்டு யோசித்துக் கொண்டுதானிருக்கிறேன்; எனக்கும் இந்த நேரத்தில் உத்தியோகக் கடமைகள் அதிகமாயிருத்தலால், விடுதலை பெற்றுக் கொண்டு புறப்பட இயலாமலிருக்கிறது; அல்லாமலும் அவரை எங்கேயென்று போய்த் தேடுவது; பிள்ளைகளை அவர் இதுவரையிற் சந்தித்திருந்தால் கூட்டிக் கொண்டு மீண்டுவருவார்; சந்திக்கவில்லை போலும்; அதற்கென்று போனவர் மக்களைக் காணுமல் மீண்டு வருவாரென்று நாம் எப்படிக் காத்திருக்கலாம். போனகருமம் கைகூடியிருந்தால் உடனே ஒரு கடிதமாயினும் எனக்கு எழுதியிருப்பார். இன்னுஞ் சில நாட்கள் பார்த்துவிட்டு, அவருடைய கடிதம் வாராவிட்டால், எப்படியேனும் விடுதலை பெற்றுக் கொண்டு போகத்தான் உத்தேசித்திருக்கிறேன; ஆணுகட்டும் பெண்ணுகட்டும் புதியாக நடந்திருந்தால இப்படியான சங்கடங்கள் வந்திருக்கமாட்டா" என்று சொல்லிப் பின்னரும் "நேரமாகிறது, நான் போய் வருகிறேன்" என்று சோமசுந்தரம் தலைவாசலிலுள்ள ஆளுக்குச் சொல்வான் போல் மாமியாரைத் திரும்பிப் பாராமற் சொல்லிவிட்டுத் தன் வீட்டிற்கு மீண்டான். அவன் இறுதியிற் சொன்ன வார்த்தைகள் மங்களத்தின் உள்ளத்தைப் போழ்ந்தன; அவள் பெரிதும் கவலை கொண்டாள்.

(வரும்)

## 'பவர்ஹவுஸ்' கிணற்றுட் பிரேதம்

### இருவர்மீது கொலை வழக்கு

### டக்றர் கூறிய சாக்ஷியம்

(நமது நிருபர்)

வண்ணார்பண்ணைகிழக்கில் வசிக்கும் 28 வயதுவரையுடைய பொன்னையா-குமாரசாமியை அவ்வூர் வாசிகளும் இறந்தவரின் சொந்தக்காரருமாகிய இருவர் நாகலிங்கம்-சோமசுந்தரம் அல்லது சுந்தரமும் மகன் சோமசுந்தரம் செல்லத்துரையும் இவர்களின் வேலைக்காரனுகிய சுப்பர் தேவர்-ஆறுமுகமுமாகக் கொலை செய்ததாகக் குற்றஞ் சாட்டி யாழ்ப்பாணம் நீதிபதி திரு. குவிண்டன் பேர்னுண்டோமுன்னிலையிற் றொடரப்பட்ட வழக்கிற் பெரியகடையில் வசிக்கும் பேதுரு-அலேசு கூறிய வற்றின் சாரமாவது:-

சென்ற 2-9-41ந் திகதி இரவு 10-30 மணிவரையில் நான் படக் காட்சி பார்த்தபின்னர் வீட்டை நோக்கிப் பெரியகடை ரோட்டால் வந்தபோது இறந்த பொன்னையா குமாரசாமி உரத்துச் சத்தமிட்டார். இப்படி இவர்சத்தமிட்டது இறைச்சி வியாபாரஞ் செய்யும் கடைக்குக் கிட்டவாக நின்ற. அப்போது அவர் "மரங்கள் கொப்புகள் முறிந்துவிழுகின்றன. காய்கறிகள் குவியலாக மிதக்கின்றன. அள்ளிக்கொண்டு போங்கள்" என்று சத்தமிட்டார். இந்தநேரத்தில் இரண்டு பொலிஸ்காரர்கள் "மேர்க் கண்டையில்" வங்கி விருந்தையிலிருந்து வந்து இறந்தவரை அவ்விடத்தை விட்டுப் போகும்படி கூறினர். அவர் போக மறுத்தார். அவர்கள் அவரைப் பொலிஸ் நிலையம் வரும்படி கேட்டனர். நான் அவரைப் பார்த்து "தம்பி நாளைக்குக்கோட்டில் இரண்டு அல்லது மூன்று ரூபா கொடுக்க நேரும். ஆகையால் இவ்விடத்தை விட்டுப் போம்" என்று சொல்லி அவரைச் சிறிது தூரம் கூட்டிச் சென்று அனுப்பிவிட்டு வந்தேன். அப்போது பொலிசார் "அவர் எங்கே" என்று கேட்டனர். நான் "அவர் போகிறுர்" என்றேன். அந்த நேரத்தில் இறந்தவருடைய நெற்றியில் ஒரு காயம் காணப்பட்டது. அவர் ஒரு வேட்டியும் சால்வையும் தான் அணிந்திருந்தார். இறந்தவரைச் சோமசுந்தரம் வீட்டிற்குக் கூட்டிச் சென்றதாக என்னுடைய வாய் முறைப்பாட்டில் நான்பொலிசாருக்குக் கூறவில்லை. அடுத்தநாட் காலை இறந்தவர் "பவர்ஹவுஸ்" வளவுக்குள் இருக்கும் கிணற்றிற்கிடப்பதாக அறிந்து அங்கு சென்று பார்த்தேன். அப்போது அவர் கௌபீனம்மாத்திரம் அணிந்திருந்தார். அவருடைய நெற்றியில் காணப்பட்ட காயத்தில் கொஞ்ச இரத்தம் வடிந்திருந்தது என்னுடைய வாய் முறைப்பாட்டைப் பொலிசார் 4-9-41ந் திகதி பதிவு செய்தனர்.

இதற்குமுன்னர் டாக்குத்தர் திரு J. M. சோமசுந்தரம் சாக்ஷியம் கூறியபோது இறந்தவருடைய பிரேதத்தில் பத்துக் காயங்கள் காணப்பட்டதாயும் இக்காயங்கள் மரணத்துக்குமுன் அல்லது மரணத்தின் சிறிது நேரத்துக்குள் உண்டாக்கப்பட்டவையென்றும்,தண்ணீருக்குள் விழுந்து மூச்சுத் திணறலால் இறந்திருக்கக்கூடுமென்றும் அபிப்பிராயம் கூறினுர்.

நீதிபதி எதிரிகளை விளக்க மறியலில் வைத்து வழக்கை மேல் விசாரணைக்கென வருகிற 23-9-41ந் திகதிக்குத் தவணையிட்டார்.

## வட்டுக் கோட்டையில் வேலைக்காரனின் திருட்டு

### எதிரிக்கு மூன்றுமாதக்கடூழியம்

15-9-41

வட்டுக்கோட்டை பேற்றில் வசிக்கும் சங். S. குலேந்திரம் என்பவரின் வேலைக்காரனுகிய ஜோசேப்-வாசீல என்பவன் ரூபா 300 பெறுமதியான நகைகளையும் காசையும் அவர் இல்லாதநேரத்தில் யன்னலை உடைத்து அறைக்குட் சென்று அலுமாரியைப் பலவந்தமாகத் திறந்து எடுத்துச் சென்று மணலிற் புதைத்து வைத்திருந்ததாகக் குற்றஞ் சாட்டிச் சங்கானைப் பொலிசாரால் யாழ்ப்பாணம் நீதிபதி மிஸ்றர் குவிண்டன் பேர்னுண்டோ முன்னிலையில் தொடரப்பட்டிருந்த வழக்கில் எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டிருந்தமையால் நீதிபதி எதிரிக்கு மூன்று மாதக் கடூழிய மறியற்றண்டனை விதித்தார்.

## ஊர் பேர் தெரியாதவர் மரணம்

### மரணவிசாரணைத் தீர்ப்பு

16-9-41

யாழ்ப்பாணம் சிவில் ஆஸ்பத்திரியில் இன்று இடம், பேர், ஊர் முதலியவை தெரியாத ஒருவரின் மரண விசாரணையைத் திரு. S.ஐயம்பிள்ளை நடத்தினுர். இறந்தவர் ஏறக்குறைய 35 வயதுடையவராகக் காணப்பட்டார்.

மரண விசாரணையின்போது பலாலியில் வசிக்கும் கணபதிப்பிள்ளை-ஆறுமுகம் கூறியதாவது:-

நான் வசிக்கும் வீட்டிலிருந்து ஒரு கூப்பிடு தூரத்திற்கப்பால் ரோட்டிற் சென்ற 14-9-41ந் திகதி காலை 6 அல்லது 6½ மணியளவிற் பலாலிரோட்டில் எனக்கு முன்னுற் பிரேதமாய்க் கிடப்பவர் காயங்களோடு அறிவு மயங்கிக் கிடந்தார். நான் உடனே அவ்வூர்க் கிராமவிதானைக்குஅறிவித்தேன். கிராமவிதானையும் நானுமாக இடத்திற்குச் சென்று ஆளை ஒரு காரிலேற்றிச் சுன்னுகம் பொலிஸ் நிலையங் கொண்டு சென்றேம். இப்படி ரோட்டிற் கிடந்தவருக்கு நெற்றியிலும் வேறு இடங்களிலும் காயங்கள் காணப்பட்டன. அவருக்குப் பக்கத்தில் துணிகளாற் கட்டப்பட்ட முடிச்சு ஒன்றும் காணப்பட்டது. அம்முடிச்சிற் கார் டயர் துண்டு, பூ, சிலவிதைகள் முதலிய வேறு சாமான்கள் காணப்பட்டன. இதையும் பொலிசாரிடம் கொடுத்தோம்.

பின்னர் 673ம் இலக்கப் பொலிஸ் சார்ஜன் K. முத்தையா கூறியதாவது:-

14-9-41ந் திகதி இறந்தவரைப் பலாலியில் வசிக்கும் கணபதிப்பிள்ளையும் விதானையாருமாகக் காயங்களோடு பொலிஸ் நிலையங் கொண்டு வந்தனர். அப்போது அவர் அறிவு மயங்கி இருந்தார். அவருடைய தலையிலும் காலிலும் காயங்கள் காணப்பட்டன. அவர் வாய் முறைப்பாடு கூறமுடியாதிருந்தார். அவர் விழுந்துகிடந்த இடத்திற் காணப்பட்ட முடிச்சுத்துணி ஒன்றையும் அவர்கள் தந்தனர். அம் முடிச்சுக்குள் யானைமயிர், பூ, மாட்டுக்கொம்பு, எலிப்புழுக்கை, ஒரு இரும்புத்துண்டு, கார் 'டயர்த்' துண்டு, சில விதைகள் முதலியன காணப்பட்டன. நாங்கள் (பொலிசார்) இறந்தவர் யாரென்றும் சொந்தக்காரர்கள் யாரென்றும் விசாரணை செய்து பார்த்தபோது ஒரு வகையான தகவல்களையும் அறிந்துகொள்ள முடியவில்லை.

டாக்குத்தர் தமது அபிப்பிராயம் தெரிவித்தபோது இறந்தவர் நெற்றியிற் பலாத்காரமாகத் தாக்கப்பட்டமையால் ஏற்பட்ட காயங் காரணமாக மண்டை ஓடு வெடித்து இறந்ததாகக் கூறினுர்.

## திருடிய வேலைக் காரனுக்குக் கோட்டில் அடி

15-9-41

மானிப்பாயில் வசிக்கும் வழக்கறிஞர் திரு. E. முருகேசம்பிள்ளை வீட்டில் மூன்றுமாத காலமாக வேலைக்கு நின்ற பதினுறுவயதுடைய நக்தோரிஸ் என்பவன் அவருடைய அலுமாரியைத் திறந்து ரூபா 30 ஐக் களவாடிச் சென்றதாகக் குற்றஞ் சாட்டி ஆனைக்கோட்டைப் பொலிசாரால் யாழ்ப்பாணம் நீதிபதி திரு. குவிண்டன் பேர்னுண்டோ முன்னிலையிற் றொடரப்பட்ட வழக்கில் எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டிருந்தமையால் நீதிபதி எதிரிக்கு ௬ அடித்தண்டனை விதித்தார்.

## இலங்கைப் பொலிஸ் 'அம்புலன்ஸ்' படை

இம்மாதம் 26ந் திகதி கொழும்பில் நடைபெறவிருக்கும் செந். ஜோன் ஆம்புலன்ஸ் படையைச் சேர்ந்த இலங்கைப் பொலிஸ்படைப் பிரிவின் அணிவகுப்பை மேன்மை தங்கிய தேசாதிபதி பார்வையிடுவார். இலங்கைத் தாதிப்படைப் பிரிவுகள் கொழும்பு தீயணைக்கும் படை, இலங்கை அரசாங்கப் புகைரதம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் இந்த அணிவகுப்பிற்கு விஜயஞ் செய்வர்.

பாடப்புத்தக விசாரணை

# பெண்கள் கல்லூரித் தலைமை ஆசிரியை சாக்ஷியம்

## "கல்வி கற்பிப்பதற்குக் கற்பலகைகள் தகுதியற்றவை"

கொழும்புப் பெண்கள் கல்லூரியின் தற்காலிகத் தலைமையாசிரியையான செல்வி என். வி. பார்க்கர் சென்ற திங்கட்கிழமைகாலை பாடப்புத்தக விசாரணைக் குழுவினர் முன் சாக்ஷியங் கூறும்போது, "கற்பலகைகள் கல்வி கற்பித்தற்கு உதவாதவை. அவை அசுத்தமானவை. அவற்றில் மாணவர்கள் தாம் செய்த வேலைகளை ஒழுங்காகக் குறித்துவைக்க முடியாது" என்று குறிப்பிட்டார்.

செல்வி பார்க்கர் மேலும் கூறியதாவது:-

"24 வருடங்களாக நான் பெண்கள் கல்லூரியோடு தொடர்புடையேன். இப்பாடசாலையில் 650 மாணவிகள் இருக்கின்றனர். 'இன்றர் மீடியற்' வகுப்புவரை கல்வி கற்பிக்கப்படுகிறது.

பாடப் புத்தகங்களை மாற்றுவது ஆசிரியரையும் தலைமையாசிரியரையும் பொறுத்த விஷயமாகும். புத்தகங்கள் வருடந்தோறும் மாற்றப்படுவதில்லை.

ஆஸ்திரேலியாவிலுள்ள பாடசாலைகள் சிலவற்றில் நடைபெறுவதுபோற் பரீக்ஷைகளைப் பாடசாலைகள் நடத்துவது மிகச் சிறந்த முறையாகும்.

பெண்கள் கல்லூரியிற் கீழ்வகுப்புகளுக்கு வாசக புத்தகங்கள் பல வைக்கப்பட்டிருக்கின்றன. இவை பாடசாலையிலேயே இருக்கும். ஒவ்வொரு மாணவியும் அவற்றை உபயோகித்துக் கொள்ளலாம்.

பெண்கள் கல்லூரியின் எட்டாவது வகுப்பிற் படிக்கும் ஒரு மாணவிக்குப் பாடப்புத்தகங்கள் வாங்குவதற்கு 25 முதல் 30 ரூபாய் வரை செலவாகும்.

### பாடசாலைகள் பரீக்ஷை நடத்தும் முறை

பாடசாலைகள் பரீக்ஷைகளை நடத்தும் முறையை இலங்கையிற் பரீக்ஷித்துப் பார்க்கவேண்டும். ஆஸ்திரேலியாவில் அந்த உண்மையான வெற்றியை அளித்திருக்கிறது. பரீக்ஷை விருப்பத்திரங்களை அரசாங்க கல்விப்பகுதி வழங்கும்.

பெண்கள் கல்லூரி அதிகாரிகளுக்குப் புத்தக ஆசிரியர்களுடனாவது சச்சரவு ஏற்பட்டதே கிடையாது. குழந்தைகள் பழைய புத்தகங்களை உபயோகிப்பதை அவர்கள் விரும்புவதில்லை.

பாடப்புத்தக விஷயமாக ஏற்பட்டிருக்கும் கிளர்ச்சி பெண்கள் கல்லூரியைப் பாதிக்கவில்லை. அவர்கள் கண்மூடித்தனமாக மாணவிகளுக்குப் பாடப்புத்தகங்களை விற்பதில்லை. இந்த விஷயத்திற் பாடசாலை அதிகாரிகள் மிகுந்த விவேகத்தோடு நடந்து கொள்கின்றனர்.

### பெண்களின் கல்விச் செலவு

ஆண்களைவிடப் பெண்களுக்குக் கல்விச் செலவு அதிகமாகிறது என்பது தவறு. பெரும்பாலான மாணவிகளின் பெற்றோர்கள் தமது பிள்ளைகள் சங்கீதம் நாட்டியம் முதலியவற்றில் தேர்ச்சி பெறவேண்டுமென்று விரும்புகின்றனர்.

திரு ஆனந்தராஜகாரியர் தமது சாக்ஷியத்தற் சமீபத்திற் பரீக்ஷை விருப்பத்திரங்கள் பரீக்ஷைக்கு முன்னர் வெளியானது பற்றிப் பிரஸ்தாபித்தார். அம்பாந்தோட்டை டிஸ்திரிக்கிலுள்ள சில பாடசாலைகளிற் குறிக்கப்பட்ட சில பாடப் புத்தகங்களை உபயோகிக்கும்படி வித்தியாதரிசிகள் ஆசிரியர்களைக் கேட்டிப்பதாயும் அவர் கூறினர்.

அவர் மேலுஞ் சாக்ஷியங் கூறும்போது பாடப்புத்தக விசாரணைச் சபை ஆரம்பித்த பின்னர்க் கல்விப் பகுதி சில முன்னெச்சரிக்கையான செயல்களைக் கையாடி விருப்பதாயும் இப்பொழுது பாடப்புத்தக நிர்வாக சபையிடம் புத்தகங்களைச் சமர்ப்பிக்கும் நூலாசிரியர்கள் ஒரு விசேஷ பாரத்தைப் பூர்த்திசெய்ய வேண்டுமென்றும் இந்தமுறை இதற்கு முன் கையாளப்பட்டதில்லை யென்றுந் தெரிவித்தார்.

## விவாகம்

### செல்லத்துரை—இராசேஸ்வரி

கொடிகாமம் வாசரும், யாழ்ப்பாணம் சேணியதெரு சன்மார்க்க போதனா தமிழ்பாஷா பாடசாலை ஆசிரியருமாகிய திரு. சின்னையா செல்லத்துரையவர்கட்கும் கொடிகாமம் கார்த்திகேசு - செல்லையா அவர்களின் புத்திரி சௌபாக்கியவதி இராசேஸ்வரி அம்மாளுக்கும் நிகழும் விஷு வருஷம் ஆவணி மாதம் 21-ந் திகதி (6-9-41) சனிக்கிழமை 2 மணிபனவில உள்ள சுபமுகூர்த்தத்தில மணமகனிலலத்தில விவாகம் சிறப்பாக நடைபெற்றது. மணமக்கள் சகல செல்வமும் பெற்று இனிதுவாழ எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவாராக.

கடிதம்.

*

### மதியாபரணம்—விஜயலட்சுமி

கொக்குவில் சமாதான நீதவான் ஸ்ரீமான் சி. முத்துவேலு அவர்கள் குமாரனும், பிறக்ராசுமாகிய திரு. மதியாபரணமவர்கட்கும், தாவடி, பிறக்ரர் ஸ்ரீமான். பொ. கா. சோமசுந்தரம் அவர்கள் குமாரி ஸ்ரீமதி. விஜயலட்சுமியம்மாளுக்கும் ஆகம முறைப்படி சென்ற 8-ந் திகதி திங்கட்கிழமை பிற்பகல் பெருஞ்சபை முகத்தில் விவாகம் மிக்க சிறப்பாக நடைபெற்றது. அடுத்தநாள் மாகாணாதிபதி முதலான உத்தியோகத்தர்களையும் மற்றும் பிரமுகர்களையும் வரவேற்கும் கொண்டாட்டம், மிக்க விமரிசையாக நடைபெற்றது. மணமக்கள் எல்லா நன்மைகளையும் பெற்று இனிதுவாழ இறைவன் அருள் புரிவாராக.

கடிதம்.

## ஆகஸ்டு மாதத்தில் ஆகாயவிமான விபத்து

லண்டன் செப் 15

ஜெர்மன் ஆகாய விமானத் தாக்குதலால் ஆகஸ்டு மாதத்தில இங்கிலாந்திலும் ஸ்கொட்லண்டிலும் 169 பேர் இறந்து விட்டதாக (அல்லது காணாமற் போய் விட்டதாகவும் பெரும்பாலும் இறந்து விட்டதாக நம்பப் படுகிறதாகவும்) அறியப்படுகிறது.

இத்தொகை 56 பேர் ஆடவர், 72 பேர் பெண்கள், 28 பேர் 16 வயதுக்குட்பட்ட குழந்தைகள்.

குறித்த காலத்துக்குள் இடையில் 136 பேர், காய மூற்று ஆஸ்பத்திரியில் இருக்கின்றனர். காயமுற்றோர்களில், 66 பேர் ஆடவர். 51 பேர் பெண்கள்; 19 பேர் 16 வயதுக்குட்பட்ட குழந்தைகள்.

சென்ற வருடம் ஆகஸ்ட் மாதத்தில் 1,086 பேர் கொலைப் பட்டனர். 1265 பேர் மிக மோசமான காயமுற்றனர்.

## இலங்கை-இந்தியப் பேச்சுக்கள்

### சமரசம் ஏற்படுவது சந்தேகமாம்

### இலங்கை இந்தியர் அந்தஸ்து விஷயம்

இலங்கை-இந்தியச் சம்பாஷணையின் போக்குத் திட்டப்படி அவ்வளவு தூரம் திருப்திகரமாகவில்லையென்று தெரிகிறது. எதிர்காலத்தில இந்தியர் இலங்கைக்கு வருவது சம்பந்தமாகக் கூட இரு தூதுக் கோஷ்டியினரும் சிரமமின்றி ஒரு முகமான முடிவுக்கு வந்து விட்டனரென்று தெரிகிறது.

ஆயின், கடைசிநேரத்தில் இந்தியரின் நிரந்தரக் குடியேற்ற உரிமை சம்பந்தமாகவும், அதையொட்டிச் சில இந்தியர்களுக்கு அளிக்கவேண்டிய வாக்குரிமை சம்பந்தமாகவும் பெரும்பிளவு ஏற்பட்டிருக்கிறதென்று தெரிகிறது.

எங்ஙனமாவது இந்த விஷயத்தில் இருபக்கத்தாரும் சமரஸமான ஒரு முடிவுக்கு வருவதற்குப் பெருமுயற்சி எடுத்துக்கொள்ளப்படுவதாகவும் தெரியவருகிறது. ஆயின், சமரசமேற்படுவது மிகவும் துர்லபம்.

வாக்குரிமை பெறுவதற்கான சேர்த்த மாசகால வரையறை சம்பந்தமாகப் பிரதானமாகத் தகராறு ஏற்பட்டிருக்கிறது. இவ்விஷயத்தில் இருபக்கத்தாருக்கு மிடையே சமரசம் ஏற்பட முடியாமலிருக்கிறது.

சென்றவருஷம் நவம்பரில் நடைபெற்ற டில்லிச் சம்பாஷணையும் இந்தியர் வாக்குரிமை விஷயத்தில் ஏற்பட்ட நெருக்கடியின் பலனுகவே குழப்பிப்போயிற்றென்பது குறிப்பிடத்தக்கதாகும், ஆயின் இப்பொழுது இவ்விஷயம் சவின்தாராயாகப் பரிசீலனை செய்யப்படவில்லை.

அநேகமாகச் சம்பாஷணை இன்று முடிவடைந்துவிடும். இலாவிடில் நாளைய தினம் கட்டாயமாக முடிந்துவிடும். அப்பொழுது உத்தியோக முறையில் ஓர் அறிக்கை வெளியிடப்படும்.

### ஞாயிற்றுக்கிழமை மகாநாடு

இந்தியா - இலங்கை மகாநாடு ஞாயிற்றுக்கிழமை காலை மீளவும் நடைபெற்றது. இரு தூதுக்கோஷ்டியினரும் சந்தித்து ஒன்றரை மணி நேரம் சம்பாஷணை நடத்தினர் சம்பாஷணை முடிந்தபிறகு கீழ்க்காணும் உத்தியோக அறிக்கை வெளியிடப்பட்டது.

"ஞாயிற்றுக் கிழமையன்று காலை 11 மணிக்கு மகாநாடு மீளவும் கூடியது. இலங்கையில் வசிக்கும் இந்தியர்கள் தாய்நாட்டுக்குப் போய் விட்டுத் திரும்பி வருவது சம்பந்தமாகவும், இலங்கையில் வசிக்கும் இந்தியர்களின் அந்தஸ்துச் சம்பந்தமாகவும் ஆலோசனை நடைபெற்றது"

ஸேர். மிர்ஸா இஸ்மெயில மகாநாட்டுக்கு வரவில்லை.

சனிக்கிழமையன்று இந்திய அரசாங்கத் தூதுக்கோஷ்டியினர் இலங்கைத் தூதுக்கோஷ்டியினருக்குக் கோல்பேஸ் ஹோட்டலில் ஒரு விருந்தளித்தனர்.

இந்தியத் தூதுக் கோஷ்டியினர் நாளை இரவு இந்தியாவுக்குப் புறப்பட்டுவிடலாம்.

சனிக்கிழமை நடைபெற்ற மகாநாட்டின் முடிவில் கீழ்க்காணும் அறிக்கை வெளியிடப்பட்டது.

மகாநாடு மீளவும் கூடி இலங்கையில் நல்லாதாரைப் பதிவு செய்வது சம்பந்தமாகவும் கோட்டா முறைப்படி சிப்பந்திகள் நியமனத்தைக் கட்டுப்படுத்துவது சம்பந்தமாகவும் ஆலோசனை செய்தது.

## உணவுப் பொருள்களின் விலையைக் கட்டுப் படுத்தல்

### யாழ்ப்பாணப் பட்டின சங்கத்தாரின் தீர்மானம்

யுத்தமென்ற காரணத்தைக் காட்டி யாழ்ப்பாணத்திலுள்ள பெரிய வியாபாரிமாரும், சில்லறை வியாபாரிமாரும், கடைக்காரரும் வாழ்க்கைக்கு இன்றியமையாத உணவுப் பொருள்களையும் ஏனைய பொருள்களையும் "கண்டபடி," விலையேற்றி விற்பதால், அந்த அடாத செயலைத் தடுத்துவைக்கும்படி உணவுப் பொருட் கட்டுப்பாட்டு உத்தியோகத்தருக்கும் வடமாகாணத் தலைவருக்கும் தெரிவிக்கவேண்டுமென்ற கருத்தமைந்த ஒரு தீர்மானம் சென்ற வாரங் கூடிய இப் பட்டினசங்கக் கூட்டத்தில் ஏகசம்மதமாக நிறைவேற்றப்பட்டது.

## பாடப் புத்தக விசாரணைச் சபை

இவ்விசாரணைச் சபையார் செப்டம்பர் 26ந் திகதி தொடக்கம் யாழ்ப்பாணத்தில் விசாரணையை நடத்துவர் என 11-9-41ந் திகதி இந்துசாதனத்தில் வெளியான விளம்பரத்திற் குறிப்பிடப்பட்டுள்ளது பிழையென்றும் செப்டம்பர் மாசம் 29ந் திகதி தொடக்கமே மேற்படி சபையார் யாழ்ப்பாணத்தில் விசாரணையை நடத்துவார்களென்றும் மேற்படி விசாரணைச் சபையின் காரியதரிசி தெரிவிக்கின்றார்.


யாழ்ப்பாண றீகல்படமாளிகைக்கு
20-9-41 சனிக்கிழமை முதல்
இதுவரை இலங்கைக்குவராத இணையற்ற திருவிளையாடற் புராணப்படம்
முதன்முறையாக யாழ்ப்பாணத்திற்கு நேரில் தருவிக்கப்படுகிறது
S. D. சுப்பையா K. K. பெருமாள் L. நாராயணருவ்
காளி N. ரத்தினம் T. S துரைராஜ்
மதுரகான V. R. சிவரத்தினம் P S. சிவபாக்கியம்
இன்னும்பலர் இறம்பட நடித்த
பக்த கௌரி
என்னும் ஒப்பற்றலீலைகள் நிறைந்தபடம்
பக்தியின் பரவசம், சித்தத்தைக்கொள்ளைகொள்ளும் சின்ஜோடினை, தித்திக்குந் தின்சுவைப்பாக்கள் நிறைந்தது
இப்படத்தில் காளி N. ரத்தினத்தின் மேளமடிப்பையும் ஹாஸ்ய நடிப்பையும் காணத் தவறாதீர்கள்!
Mis—101 15&19.9.41


## ஞானிகள் பாடலும் பாரதியார் பாடலும்

இந்துசாதனப் பத்திராதிபர் அவர்களுக்கு:—

ஐயா,

சென்ற வியாழக்கிழமை (11-9-41) வெளிவந்த இந்துசாதனப் பிரசுரத்திலே உடுப்பிட்டி ஆசிரியர் திரு. க குமாரவேலு அவர்கள் "பாரதி நிருதான்" என்னும் விஷயமாக எழுதிய கட்டுரையிலே, "தாயுமானுர் பட்டினத்தடிகள் முதலிய பழந்தமிழ்ப் பெருமக்கள் செய்த வேதாந்த தால்கள் ..................................... ......பெரும்பாலும் மனித வாழ்க்கையின் நிலையாமையையும், அவர்களுக்கு நேரிடும் பிணி மூப்பு முதலிய கேடுகளையும் பற்றி முறையிடுவதால் மக்களுக்கு உலகவாழ்வில் ஊக்கம் குன்றி வெறுப்பு உண்டாகின்றது. ஆனல்,.................... பாரதியாரின் வேதாந்தப் பாக்களை யாவரும் எளிதில் விளங்கிக்கொள்ளக்கூடிய தெளிந்த நடையில் மிளிர்வதோடு படிக்கும் ஒவ்வொருவருக்கும் புத்துயிரளித்து உலக வாழ்வில் ஊக்கமும் விருப்பமும் உற்பத்திசெய்து உலவுகின்றன" என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

அவ்வப்பாடல்களை ஓதுவதனுல் உண்டாகும் பலன்களை ஒருவரும் மறுக்கவில்லை, ஆனல் ஆசிரியரவர்கள் தாமெடுத்துக்கொண்ட விஷயத்தின் சிறப்பு நோக்கித் தாரதம்மியம் காட்டத் தலைப்பட்ட விடத்துத் தாம் எண்ணுதனவும் சாத்திரப்பிரகாரம் கட்டுரையிற் புகுந்திருப்பதைக் கவனிக்கவில்லைப்போலும். வெவ்வேறு மகான்கள் வெவ்வேறு நிலையிலிருந்து வெவ்வேறு நோக்கங்களுடன் கூறிய மொழிகளை மேற்குறிப்பிட்டவாறு ஒப்பிடும்பொழுது விஷயமறியாத வாசகர்களுக்கு விபரீத விளக்கமும் மகாஞானிகளுடைய திருவாக்குக்கள்மீது அவநம்பிக்கையும் பிறத்தற்கு இடமுண்டாகின்றது. ஞானவில் இது சிறு நிகராகும். ஆகையினுலே இவ்விஷயமாக வாசகர்களுக்கு ஏற்படக்கூடிய விபரீத விளக்கம் முதலியனவற்றை நீக்குவதற்கு ஆசிரியர் தயவுகூர்ந்து ஆவன செய்துகொள்வாராக.

இங்ஙனம்

சோம. சரவணபவன்.

தெஹிவலை

13-9-41

## சுவாமி அசங்கானந்தஜீக்குப் பிரியாவிடை

இம்மாதம் 14ந் திகதி கொழும்பு வெள்ளவத்தையிலுள்ள இராமகிருஷ்ண மடநிலையத்தில், ஏறக்குறைய 25 வருஷ காலமாகக் கொழும்பு மடநிலையத்துக்குப் பொறுப்பாளராயிருந்த ஸ்ரீமத். சுவாமி அசங்கானந்தஜீ அவர்களுக்கு ஒரு பிரியாவிடைக்கூட்டம் நடைபெற்றது. திரு. A. செல்லமுத்து M. B. E. சுவாமிஜீக்கு மாலையிட்டார். கொழும்பு மேயர் டக்டர் R. சரவணமுத்து பிரியாவிடைப் பத்திரத்தை வாசித்தளித்தார். அதன்பின், சுவாமியவர்களுக்கு ஒரு பணமுடிப்பும் கண்டியச் சித்திர வேலைத் திறமையைக் காட்டும் இரு தட்டங்களும் அளிக்கப்பட்டன. திருவாளர்கள் பெருமாள்பிள்ளை (வழக்கறிஞர்) K. பொன்னையா (விவேகானந்த சபைக் காரியதரிசி) E. R. தம்பிமுத்து (அரசாங்கசபை அங்கத்தவர்) ஆகியோர் சுவாமியவர்களின் குணங்களைப் பாராட்டிக் குறிப்புரைகள் கூறினர்கள், இக் கூட்டத்தை ஒழுங்குசெய்தோருக்கும் சபையோருக்கும் சுவாமியவர்கள் நன்றியறிதலைத் தெரிவித்து ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்தினதும் மிஷனினதும் இலக்ஷியங்களை வலியுறுத்தினர்.

கூட்டத்துக்குத் தலைமை வகித்த ஸ்ரீமத். சுவாமி அவினாசானந்தஜீ தமது முடிவுரையில் பல்வேறு சமயங்களைச் சேர்ந்தோரும் பல்வேறு சாதியினரைச் சேர்ந்தோரும் பலவேறு கலைஞானங்களைச் சேர்ந்தோரும் ஒரே மேடையில் நின்று பேசுவதற்குத் தங்கள் ஸ்தாபனம் இடங் கொடுக்குமென்றும், அன்பையும், சமாதானத்தையும் உண்டாக்கும் ஒரு மத்தியஸ்தானமாக இருக்குமென்றும் குறிப்பிட்டார்.

வெள்ளவத்தைச் சங்கீத பாடசாலையைச் சேர்ந்த பிள்ளைகள் சில பாட்டுக்களை பாடக் கூட்டம் இனிது நிறைவேறியது.

## தொடா[ர்ந்த] வழக்கு

"தகப்பனருடைய கல்யாண காலத்திற் சமுகமாயிருந்தேன்"

கொழும்பு டிஸ்திரிக் கோர்ட்டில், செக்கடித்தெருவில் வசிக்கும் விசாலாட்சியென்னும் பெண் தனது புருஷனுகிய பலாங்கொடை சுப்பிரமணியம் வேலுப்பிள்ளை யென்பவருக்கு மாறாகத் தொடர்ந்த தொடா[ர்ந்த] வழக்கு விசாரணை செய்யப்படலாயிற்று. விசாரணைப்போது விசாலாட்சி சொல்லிய முறைப்பாடு:-

சென்ற 1916ம் ஆண்டில் இவர் என்னைச் சைவ சமய முறைப்படி கல்யாணஞ் செய்துகொண்டார். எங்களுக்கு மூன்று பிள்ளைகளுண்டு; இரண்டு மூன்று வருட காலமாக என் புருஷன் என்னைக் கொடுமையாக நடத்தத் தலைப்பட்டுக்கொண்டார்; ஆனதால் நான் இவரைப் பிரிந்திருக்கவும் எனக்கும் பிள்ளைகளுக்கும் தாபரிப்புக்காக மாசம் 500 ரூபா கட்டவும், நான் இவருடைய மனைவியென்ற உரிமையில் என் பங்காக ஐம்பதினுயிரம் ரூபா எனக்குக் கொடுக்கவும், பராயமற்ற என் இரு பிள்ளைகளை என் பராமரிப்பில் விடவும் உத்தரவு செய்யும்படி "கோட்"டாரைக் கேட்டுக் கொள்ளுகிறேன்"

இதற்கு, எதிரியாகிய சுப்பிரமணியம் வேலுப்பிள்ளை என்பவர் தாம் அப்படி எதுங்கொடுமைசெய்ததில்லையென்றும், தாம் அந்தப்பெண்ணைச் சமயமுறைப்படி சடங்கு செய்ததில்லையென்றும் மறுத்துத் தமக்குக் கோட்டுச்செலவு இதுக்கச் செய்து வழக்கையுந் தள்ளிவிடும்படி கேட்கிறார்.

எதிரியின் முந்தியதாரத்து இரண்டாம் மகனுகிய முருகேசு சொன்ன சாட்சியம்:- "முந்தியதாரத்துப் பிள்ளைகளின் பிறப்பைத் தகப்பனுர் தம் பெயரிற் பதிவுசெய்து வந்தாரோ என்பதைப்பற்றி எனக்குத் தெரியாது. அவர்கள் முறைப்படி கல்யாணஞ் செய்தார்களோ என்பதையும் நான் அறியேன். வழக்காளி முந்தியோரு கணக்காளிக்குத் தாரமாக இருந்ததை நான் அறிவேன்."

முந்தியதாரத்து மூத்தமகனுகிய சுப்பிரமணியஞ் சொன்ன சாட்சியம்:- "நான்தான் அப்பருடைய முந்தியதாரத்து மூத்தமகன்; எனக்கு வயசு 61. இந்த வழக்காளியை எங்கள் தகப்பனுர் இரண்டாந் தாரமாக 1916ம் ஆண்டு ஜனவரிமாசம் கல்யாணஞ் செய்து கொண்டார்; அந்தச் சமயத்தில் நானுஞ் சமுகமாக விருந்தேன்" விசாரணையின் பின் இவ் வழக்கு 1942ம் ஆண்டு பெப்ரவரி மீ 2ந் தேதிக்குத் தவணையிடப்பட்டது. எதிரியாகிய சுப்பிரமணியத்தின் வயசு 105.

## திரு. பொ. இரகுபதி

திரு. பொ. இரகுபதி B. A. அவர்கள் அத்வக்காத் பரீக்ஷையில் தேறி இம்மாதம் 10-ந் தேதி உத்தியோக வாக்குப் பிரமாணஞ் செய்து இம்மாதம் 17ந் திகதி தொடக்கம் யாழ்ப்பாணத்தில் அத்வக்காத்தாகக் கடமையாற்றி வருகின்றார் என அறிந்து மகிழ்கின்றோம்.

## றீகல் படமாளிகை

### "பக்த கௌரி"

இச்சிறந்த சரித்திரப்படம் வருகிற சனிக்கிழமை (20-9-41) தொடக்கம் யாழ்ப்பாணம் றீகல் படமாளிகையில் அதிவிமரிசையாகக் காட்டப்படும். விபரத்தை இற்றைப் பிரசுரத்தில் பிறிதோரிடத்திற் காண்க.

## ஜவஹர் சிறைவாழ்க்கை

ஸ்ரீமதி. விஜயலக்ஷுமி பண்டிதர் வார்தாவில் மகாத்மாவைக் கண்டு பேசிவிட்டு அலகாபாத்துக்குப் புறப்பட்டார். அவரைப் பத்திரிகை நிருபர் கண்டு பேசியபோது, அவர் தாம் காந்திஜியுடன் ஐக்கிய மாகாணச் சத்தியாக்கிரஹ இயக்கத்தைப்பற்றிக் கலந்து பேசியதாகவும் காந்திஜீ சில யோசனைகளைக் கூறியதாகவுஞ் சொன்னுர், அதன்பின் ஸ்ரீமாந். ஆர். எஸ் பண்டிதரையும் பண்டித ஜவஹரையும் சிறையிற் கண்டு பேசியதாகவும், அவர்கள் சுகமாக விருப்பதாகவும் மௌலானா ஆஸாதையும் தாம் கண்டு பேச விருப்பதாகவுங் கூறினுர்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல 16680

பண்டைத்தரிப்பு அந்தோனிப்பிள்ளை இசிதோர் செபஸ்தியாம் பிள்ளையும் பெண் 2 எலிசபேத் வழக்காளிகள்

எதிராக

சில்லாலை தெய்மோந்துப் பிள்ளை கைம்பெண் வாபுருப்பிள்ளை

எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 16680-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல்விவரிக்கப்படும் காணித்துண்டுக்காணிகள் 1941 ஆம் ஐப்பசி மீ 11 உ சனிக்கிழமை பிற்பகல் 2½ மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள்ளின்று பிரசித்தவலத்தில் விற்கப்படும். 1941 ம் ஆண்டு வைகாசி மாதம் 15 திகதி தொடக்கம் 1941 ம் ஆண்டு ஆடி மாதம் 1-ந் திகதி வரையும் நிர்ணயத் தொகை :- முதல் வட்டி ரூபா 2951 இன்னும் ரூபாய் 2000 த்துக்கு வருஷம் ஒன்றுக்கு ரூ 100க்கு-8 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் வருஷம் 9 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 166 23½ யும்.

### காணிகளின் விபரம்

1 பண்டைத்தரிப்பு இறை மூதியாவத்தை பர. சி இ 8½ செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு, அந்தோனிப்பிள்ளை சீமான்பிள்ளையின் ஆதனம், வடக்கு ஒழுங்கை, மேற்கு, பெரியான் கோவிந்தியின் ஆதனம், தெற்கு, சின்னத்தம்பி தம்பையாவின் ஆதனம்.

2 மேற்படி இறை காட்டு வயல் பர. சி இ. 12½ இணறும் எல்லை கிழக்கு, மிக்கேல் தம்பிப்பிள்ளையின் ஆதனம், வடக்கு பொன்னம்பலம் பெண் பொன்னுச்சியின் ஆதனம், மேற்கு அந்தோனிப்பிள்ளை லோறஞ்சின் ஆதனம், தெற்கு கந்தர் வீரசிங்கத்தின் ஆதனம்.

3 மேற்படி இறை வட்டன் சீமாவும், மறபிரிவுகளும் பர. சி இ 19. இணறும் செய்பயிர் வான்பயிர்களும் பனைகளும வடலிகளும் எல்லை, கிழக்கு அந்தோனிப்பிள்ளை மோசேசம் பக்கானரின் ஆதனம், வடக்கு தம்பிப்பிள்ளை ஆசீர்வாதத்தின் பிள்ளைகளின் ஆதனம். மேற்கு யேம்ஸ் வீரசிங்கம் சைமனின் ஆதனம், தெற்கு றோட்டு.

4 மேற்படி இறை வயலிப்புலம் பர சி இ 10, எல்லை கிழக்கு அருணாசலம் பெண் வள்ளியம்மையின் ஆதனம், வடக்கு சந்தியாப்பிள்ளை ஆசைப்பிள்ளையின் ஆதனம், மேற்கு அப்புத்துரை சுப்பையாவின் ஆதனம் தெற்கு எதிரியின் ஆதனம்.

ச. பொன்னப்பா

கொமிஷனர்.& ஆக்ஸனர்

இணுவில் 17- 9- 41

Mis 102 18- 9- 41

## நீர்வேலிக் கிராமச் சங்கம் தலைவர் தேரிவு

கிராமச்சங்க காலந்தோடக்கமாக அங்கத்தவராக விருப்பவரும், ஊரவர்களாற் பெரிதும் பாராட்டப் படுபவருமாகிய நீர்வேலி ஸ்ரீமாந் தா. கணபதிப்பிள்ளையவர்கள் சென்ற (10-9 41) புதன்கிழமை நடைபெற்ற டி சங்கத் தலைவர் தேரிவில் போட்டியின்றித் தேரிவு செய்யப்பட்டிருக் கின்றனர். அப்பொழுது வடமாகாணத் தலைவரவர்கள் தலைமை வகித்தனர். ஏனையவர்கள் தலைவருக்குச் சோபனவாழ்த்துக் கூறியபின், தலைவரவர்கள், தேரிவு நடைபெறுங் காலங்களிலே மனஸ்தாபம் முதலானவை உண்டாகுதல் வழக்கமென்றும் அவைகளை இப்பொழுதே மறந்துவிட வேண்டுமென்றும் அங்கத்தவருடைய கூட்டுறவே தலைவரென்றிருப்போர் சங்கத்தைத் தக்கவாறு நடத்துவதற்கு அத்தியாவசியகம் வேண்டப்படுவதென்றும் போட்டியின்றித் தம்மைத் தலைவராகத் தேரிவு செய்த அங்கத்தவரின் பெருந்தன்மையை வியந்தும் பேசியபின் எல்லோருக்கும் ஸ்துதி கூறினர் அதன்பின் உபதலைவர் தேரிவு நடைபெற்றது. உரும்பராய் ஸ்ரீமாந் து கா. தருமலிங்கம் ஊரெழு ஸ்ரீமாந் து. தம்பையா என்னு மிருவரும் அந்தஸ்தானத்தைப் பெறும் பொருட்டுப் போட்டிவிட்டனர். அங்கத்தவருட் கூடியதொகையினர் ஸ்ரீமாந். தருமலிங்கமவர்களுக்குச் சார்பாகச் சம்மதங் கொடுத்தமையினுல் அவரே உபதலைவராகத் தேரிவு செய்யப்பட்டனர். உபதலைவர் குறிப்புரையுடன் ஸ்துதி கூறினர்.

## கிராமச் சங்கங்களின் புதிய தலைவர்கள்

கீழேகுறிக்கப்பட்டோர்கள் 1941 தொடக்கம் 1944 ஆண்டுவரைக்கும் தேரிவுசெய்யப்பெற்ற கிராமச் சங்கத் தலைவர்களாவர்.

நெடுந்தீவு ஸ்ரீமதி செல்லம்மா நாகேந்திரம்
நயினுதீவு ஸ்ரீ S விசுவலிங்கம்
புங்குடுதீவு ¦ V பசுபதிப்பிள்ளை
அனலைதீவு S சிவபாதசுந்தரம்
காரைநகர் S பொன்னம்பலம்
வேலணை ¦ கிளவ் பாலசிங்கம்
அல்லைப்பிட்டி ¦ K கைலாயபிள்ளை
நல்லூர் N K நல்லதம்பி
கொக்குவில் ¦ S நவரத்தினம்
மானிப்பாய் C தியாகராசா
வட்டுக்கோட்டை A T வேதாபரணம்
சங்கானை C தில்லையம்பலம்
பண்டத்தரிப்பு S சேகரநாதர்
உடுவில் S மாணிக்கம்
மல்லாகம் S T இராசரத்தினம்
மயிலிட்டி ¦ S சுவாமிநாதன்
அச்சுவேலி A வேலுப்பிள்ளை
புத்தூர் A K முத்துக்குமாரு
நீர்வேலி T கணபதிப்பிள்ளை
கோப்பாய் S சுப்பிரமணியம்
நாவற்குழி ¦ N மானூர்
சாவகச்சேரி ¦ S கணபதிப்பிள்ளை
கச்சாய் ¦ S K செல்லையா
மிருசுவில் ¦ S வேலுப்பிள்ளை
வரணி ¦ V சிதம்பரநாதன்
உடுப்பிட்டி A கந்தையா
கட்டைவேலி ¦ N கனகசிங்கம்
புலோலி V பொன்னையா
துன்னாலை ¦ K D சின்னப்பு
செம்பியன்பற்று K சின்னத்தம்பி
முள்ளிப்பற்று ¦ S குமாரசுவாமி
புலோப்பளை V கதிர்த்தம்பி
முகமாலை ¦ K கந்தையா
கரைச்சி ¦ P அம்பிகைபாகன்
பூநகரி ¦ C T குமாரசாமி
பல்லவராயன்கட்டு V அம்பலவாணர்
துணுக்காய் ¦ S இரத்தினசிங்கம்

¦ இந்த அடையாளம் சங்கத் தலைவராக மீட்டும் தேரிவு செய்யப் பெற்றோரைக் குறிக்கும்.

## இந்திய தேசியப் பாதுகாப்புச் சபை

இந்திய தேசியப் பாதுகாப்புச் சபையின் முதற்கூட்டம் ஒக்டோபர்மீ முதல்வார இறுதியிற்கூடலாமென்றும் அது ஏறக்குறைய 3 நாட்கள் தொடர்ந்து நடக்கலாமென்றும் தனிப்பட்டவர்கள்மூலம் கிடைத்த தகவலிலிருந்து தெரியவருகிறது. மூன்று முஸ்லிம் பிரதம மந்திரிகள் ராஜிநாமாவினுல் மேற்படி சபையில் ஏற்பட்ட காலிஸ்தானங்கள் உடனே நிரப்பப்படுமா என்பது தெரியவில்லை.

சப்ளைப் பகுதியின் ஜவுளி உதவும் பகுதியைக் குறிப்பாகக் கம்பளி, பட்டு கயிறு முதலியவை சம்பந்தமான பகுதியை டில்லியிலிருந்து பம்பாய்க்கு மாற்றிவிட அரசாங்கத்தார் முடிவுசெய்திருக்கின்றனர்.

## ...ன்னை ...ஷ்ணபாய்

(...லாம்பக்கத் தொடர்ச்சி)

...பஞ்சத்தை முற்றத் துறந்து அவ ளையே பொருளாகக் கொண்டு தானறநின்று வழிபட்டார். அம் மையாரின் சசப்பித்து, காசுப்பித் தும், காம்பித்தும் பிடித்திலர்த சராக்கோட்டுக் கசடர் இலர்க்குப் பிடிக்கவில்லை. அவர்கள் செய்த இம்சைகள் பல. அவற்றையெல் லாம் அம்மையார் பொறுமையுடன் ஏற்றுத் தமது லட்சியத்தை நோக்கி முன்னேறுவதற்கு வழித்துணையாக மாற்றிக் கொண்டார். ஜீவிதர சக்தி-போதம் எய்திய தலைமையர ராதிஞல்,

"பரம்பிரம மிவளென்றும் பராசிவ
னிவளென்றும்
பாஞான மிவளென்றும் பராபரன்
குளென்றும்
அரன்தருஞ் சிற்கலை எல்லாமிவளே
யென்றும்
அருட்குருவை வழிபடவே யவனி
வன்றானேயே."

எனச் சிவஞான சித்தியார் விபரிக் கும் குருவழிபாட்டால் பூரண நிலை யை அடைந்தார். இன்று அம்மை யார் சுவாமி ராமதாசருக்கும் அவ ரது பக்தர்கோடிக்கும் தூயஅன்னை யாராக விளங்குகிறார். அவரது தாயன்பு அளந்து அழுங்கண்டுபிடிக்க முடியாத ஓர் பெருஞ் சமுத்திரம். சோதி, சத்தம், சாந்தம்,

அருள் இவையே அதின் அலைகள். இந்த விநமான புனிதக் கடலில் தோன்றிய மூத்தே ஆனந்தாச்சிரமம் என்னும் அன்பு நிலையம். சுருங்கக் கூறுமிடத்து அன்னையாரின் வாழ்வு, ஸ்ரீமத் பகவத்கீதையில் அடங்கிய கர்மம், பக்தி, ஞானம், என்ற மூன்று யோகங்களின் விரிவுரைபோல் விளங்குகின்றது. ஆனந்தாச்சிரமத்தைத் தரிசிப்போர் எவராவது இந்த உடமாடும்புப்பற்றல் ஏதோ வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் தத்துவங்களில் சிலவற்றை நாடாமல் திரும்ப முடியாது. நவீன நாகரீகமென்னும் மாயவலையிற் சிக்கி 'சமத்துவம்,' 'சுதந்தரம்', 'விடுதலை' என்ற போலி மந்திரங்கட்கு அடிமைகளாய் இன்னற்படும் எங்கள் இந்துப் பெண்கள் பலருக்கு பழைய இந்திய மாதர்களின் பக்தித் திறனையும், ஆத்ம சக்தியையும், தியாகத்தின் மாண்பையும் நினைவூட்டுதற்கு, தூய அன்னை கிருஷ்ணபாயின் வாழ்வானது ஓர் மலை விளக்குப் போல் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது.

### ஆனந்தாச்சிரமம்

சிவதத்துவம் ஆதாரஞானம். சக்திதத்துவம் கிரியை. இவ்விரு தத்துவங்களும் உருவெடுத்தாற் போன்று, சுவாமி ராமதாசரும் அன்னை கிருஷ்ணபாயும் அவர்களது அடியார்களுடன் வாழும் அருள் நிலையமாம். ஆனந்தாச்சிரமமானது தென் கன்னடத்தில் மங்களூர் செல்லும் புகைரதப் பாதையிலுள்ள கஞ்சன்காட் என்னும் ஸ்டேஷனிலிருந்து ஐந்து மைல் தூரத்தில், எல்லா இயற்கை வனப்புஞ் செறிந்த மஞ்சம்பதி பெண்ணும் மலைத் தொடரிலுள்ள ஓர் குன்றின் மேல் அமைக்கப்பட்டுள்ளது. மாரிகாலத்து இங்கு வாரும் ஓர்வித இன்பத் புல்லழகு அக்குன்றின் மேல் பச்சை இரத்தினக் கம்பளம் விரித்தது போல் மினிர்கின்றது. குன்றின் மேல் நின்று எத்திசையை நோக்கினும் இயற்கை இன்பம் ததும்புவதைக் காணலாம். மேற்கே நான்கு மைலுக்கப்பாலுள்ள அரபிக் கடலின் ரமணியமான காட்சியானது, கிழக்கே வெகுதூரம் தாழ்ந்தும் பரந்தும் கிடக்கும் மலைத்தொடரின் உன்னத தோற்றத்துடன் அழகுப் போட்டியில் ஈடுபட்டிருப்பது போலத் தோன்றுகிறது. பல ஆறுகளுக்குமுன் இவ்விடத்தில் ஓர் வித்துவ யோகியும் தடாகமும் இருந்ததாகக் கர்ண பரம்பரை. அயலிலுள்ள மலைகளில் யோகிகள் வசிக்கக்கூடிய பல குகைகள் இன்னும் உள்ளன.

சுவாமிகளையும் தூய அன்னையாரையும் தரிசித்து, அவர்களின் திவ்ய சந்நிதானத்தில் சில தினங்களைத் தங்கிச் செல்ல இந்தியாவின் பல பாகங்களிலுமிருந்து பக்தர்கள் எப்போதும் வந்து கொண்டிருக்கின்றனர். தங்குவதற்கு வசதியான வீடுகள் உண்டு. சாதிமத பேதம், சாத்திர கோத்திர உபத்திரவம், செல்வர் வறியவர் என்ற பாகுபாடு ஒன்றுமே இங்கு கிடையாது. எங்கு பார்த்தாலும் பரிசுத்த மயம். எவரைக் கண்டாலும் அன்புமயம். 'அன்னையின் பாதம் அடிக்கடி தீண்டுவதாம் போலும் இவ்விடத்துள்ள கல்லும் புல்லும் கூட அன்பு மணம் கமழ்கின்றன' என்று அங்கு சென்று திரும்பிய வர்கள் சொல்லிக் கொள்கிறார்கள். ஆச்சிரமம் மென்மேலும் வளர்ந்து வருவதற்குக் காரணம் அன்னையின் அளவற்ற சக்தியே என்று குருதேவரே சொல்லுகிறார்.

அபிமானிகளின் பொருளுதவி கொண்டு இந்த ஆச்சிரமம் பல துறையில் பணி செய்கின்றது. அன்பையும் சமரச உணர்ச்சியையும் பரப்பும் நோக்கத்துடன் சஞ்சிகைகள் மாதந்தோறும் வெளிவருகின்றன. ஏழைகட்கு நோய் தீர்க்க ஓர் தர்ம வைத்தியசாலை யுண்டு. தீண்டாச் சாதியினரின் பிள்ளைகட்குக் கல்வி அறிவூட்ட ஓர் பாடசாலையும் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. இப்பணிகளெல்லாவற்றிலும் மேலாய அப்பன் அம்மை இருவரின் புனித தரிசனமே, வாழ்வு எனனுஞ் சமுத்திரத்தில் கரைகாணற்ற கப்பலைப்போல கஷ்டப்படும் சீவர்கட்குச் சமய சஞ்சீவிபோல் இருக்கின்றது. அன்பும், அருளும், ஆனந்தமும் ஒருங்கே அவர்கள் வதனங்களில் நடம்புரிகின்றன. ஸ்ரீ ரமணாச்சிரமத்திலும் ஆனந்தாச்சிரமத்திலும் தங்கியிருந்த ஐரோப்பிய பக்தர் ஒருவர் தமது சொந்த அனுபவத்தைக் கூறியவிடத்து, முக்தியைத் தருவதாகவும் சித்தியைத் தருவதாகவும் விபரித்ததை இங்கு குறிப்பிட விரும்புகிறேம். சுவாமி ராமதாசருக்கும் அன்னை கிருஷ்ண பாயக்கும் பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷிகள் மீது அளவற்ற அன்பும் விசுவாசமுமுண்டு. அவர்கள் தமிழ் நாட்டுக்கு வரும் போது திருவண்ணாமலையைத் திரும்பிச் செல்லும்போது பகவானின் தரிசனம் பெற்றுப் போகும்படி சொல்வது வழக்கம். அவர்களின் தியான மண்டபத்தின் மேல் வாசற்படியில் பகவான் ஸந்நிதியுடன் காட்சியளிக்கும்படமொன்று தொங்க விடப்பட்டிருக்கிறது. இரண்டு தலங்கட்குமிடையே யிருந்து வரும் ஆத்யாத்ம தொடர்ச்சிக்கு இதுவன்றோ போதிய சான்றாகும்.

---

"காயகல்ப"

அனுகூல சிகிச்சை

காயசித்தி, தந்துவக்குறைவு, சலரோகம், வாதம், பிறவியின் வாதம், வலி, தோற்புவா வியாதிகள், குட்டம், ஆகியவை நோய்களுக்கு அனுகூலமான சிகிச்சை.

மேகராசா

சலரோகம், நீரழிவு ('அல்புமென்' அடையல், புளித்திராவகம், அதிக நீரழிவு ஆகிய எந்தநிலையிலிருப்பினும்) க்குக் கைகண்டமருந்து. பத்தியம் இல்லை. 15 நாட்களுக்குக் காணக்கூடிய போத்தல் ஒன்றுக்கு விலை ரூபா 4-00.

சுண்டிக்குளித்தபாறகந்தோர்த் தலைவரின் வருமாறு எழுதுகிறார்:—

நீரழிவுக்குரிய உங்கள் மேகராசா என்னும் மருந்தை நான் ஒரு மாசமாக உபயோகித்தேன். என் சலம் சுத்தமாகி விட்டது. இந்தச் சிகிச்சைக்காக உங்களுக்கு நான் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்ஙனம்,

P. நடராஜா.

பின்வருவோரைக் கலந்தாலோசியுங்கள்:—

டக்டர் K. T. மங்களம்
R. I. M. P.
(சென்னை)
M. S. V. S. அங்கத்தவர்,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

Q 82 7-8—6.11.41

---

### விசேஷ அறிவித்தல்

சம்பூரண கைரேகை பலன், ஆருடம் (சிந்தனை சாஸ்திரம்) முதலிய சாஸ்திர சம்பந்தமான எல்லா விஷயங்களையும் கீழ்க் காண்பவரிடம் அறிந்து கொள்ளலாம்.

கிரகஸ்புடம், தச வர்க்கம், அஷ்டவர்க்கம், பாவநிலை முதலிய கணித வகைகளும், மகாதெசா புத்தி பலன், துவாதச பாவபலன், கோசரபலன், காலசக்கரபலன் முதலியன அடங்கிய பெரிய ஜாதகம் எழுத ரூபா 10/—

நா. சின்னத்துரை

போக்கத்தை,
கைதடி வடக்கு, கைதடி.

Y 67 20-7.41—19-7.42

---

### பக்தர்கள் நோய்தீர வேண்டுமா?

உங்கள் நோய் கர்மநோயானாலுஞ் சரி இங்கிலீஷ், தமிழ் டாக்டர்களால் தீர்க்க முடியாத நோயைப் பழநியாண்டவர் அபிஷேக பஞ்சாமிர்தம், சந்தனம், விபூதி முதலாம் அருட்பிரசாதம் (போகரிஷி அவுடதம்) உட்கொள்ளத் தீர்ந்து சுகதேகமாகலாம்.

ஷை பிரசாதங்கள்
தபாற்செலவுடன் ரூபா 5—0—0

P. நடராஜபண்டாரம்
மலைக்கோவில் அயன்பிராஸ் பழநி.
Q 92A 25-8.41—24-11.41(வி)

---

## எது தமிழ்?

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

'தோகை என்னும் தனித் தமிழ்ச் சொல் எபிரேய பாஷையில் 'துகி' என வழங்கப்படுகிறது. 'தோப்பு' என்னும் தமிழ்ச் சொல் ஆங்கிலத்தில் 'Tope' டோப் என்றே வழங்கப்படுகிறது. இதேபோன்று பிறமொழிச் சொற்கள் தமிழரால் கையாளப்படுகையில் தமிழ் நிலைக்குத் திக்கவாறு மாறுதலடைகின்றது. Glass என்பது, கிளாசு 'என்றும்' Cup என்பது 'கோப்பை' என்றும் வழங்கி வரக் காணலாம். 'சந்தி, ஸ்தலம்' என்னும் வடமொழிச் சொல், 'சந்தி, தலம்' என்று தமிழாக்கப்படுகின்றன. ஆகவே தமிழில் வந்துகலக்கும் ஏனைய மொழிச் சொற்கள், தம தன்மை இழந்து, தமிழோடு ஒத்து, தமிழின் உருவத்தைப் பெற்று இயல்பாக வழங்கலாப்படுகின்றன. 'எஞ்சின்' 'ட்ரெயின்', 'டிக்கட்', 'டிராம்', 'ச்ரீகூக' 'டீ ப்', 'மார்க்கெட்', 'பென்ஷன்', 'சப்ரிஜ் ஸ்ர்' ஆகிய ஆங்கிலப் பதங்கள், தமிழிலேயே உச்சரிக்கப் படுகின்றன. ஆங்கிலம் தெரியாதவருக்கும் அர்த்தமாகிறது. இதைவிடுத்து, 'பொறி, 'வண்டித் தொடர்', 'சீட்டு' 'மின்சார வண்டி', 'கல்லூரி' 'கடை' 'அங்காடிக் கடை', 'உறுதிச் சீட்டுப் பதிவின் விடுகாசு பெற்றோர்' என்ற தூய தமிழ்ச் சொற்கள் பலருக்கும் விளங்கா, என்ற காரணம் ஒன்றையே கருதித் தனித் தமிழிலேயே பேச இயலாது என்று சிலர் கருதுகின்றனர். பிறமொழிக் கலப்பின்றித் தனித் தமிழில் பேச இயலும். இவ்விதம் பேசுவோரும் உளர். ஆனால் இக்காலத்துச் சமுதாயத்தார் யாவராலும் அவ்விதம் பேச இயலாது. இதற்காகச் சந்தையிலும், கடையிலும் பேசப்படும் மொழியே தமிழ் என்று நாம் கருதுவோமாயின், தேவாரம், திருவாசகம், திருக்குறள் முதலிய தமிழ் நூல்களுக்கு இடமேயில்லை. இனி, 'சலாம்' 'சுபாஷ்' என்னும் இஸ்லாமிப் பதங்களை அப்படியே எடுத்தாண்டிருக்கின்றனர்.

'குமரர்மகட்குச் சலாமிடற்கேக்கறுமாரனை முத்துக்குமாரனைப்
பொற்றதும்',

என்று மீனாக்ஷியம்மை பிள்ளைத் தமிழில், குமரகுருபரரும்;

'கற்பகத் திருநாடுயர் வாழ்வுற
விதசர், விஞ்சையர் மாகசபாசென
சட்டவெங்கொடு சூர்கிளை வேரற
விடுமவேலா...

என்று திருப்புகழிலும் அமைத்துப் பாடியிருக்கின்றனர். ஆதலால் புலவர்கள் பிறமொழியைப் பகை உணர்ச்சியோடு கருதாது எடுத்தாண்டிருப்பதற்கு இவையே சிறந்த சான்றாகும்.

சிலர் தமிழ்மொழியில் சமஸ்கிருத பதங்களைக் கொண்டுவந்து புதுத் திமணிப்பிரவாள நடையாக ஆக்குகின்றனர். இதுவும் பொருந்தாது. 'நேத்திரம் சூக்ஷ்மக் குறையோ? தாகத்திற்குத் தீர்த்தம் வேண்டுமா?' 'ஸ்பஷ்டமாய்ச் சொல்வேன கேள்.' 'அவளைப் பார்த்தாலே படாடோப பயங்கரமாயிருக்கிறதே' என்றெல்லாம் சொல்வது வீண்.

பற்பல பிறமொழிகள் வந்து தமிழின் கலப்பின், தமிழ் இறக்கொழியும் என்று எண்ணுவார்க்கோர் வார்த்தை. இலத்தீன, கிரீக் ஆகியவைகளின் கலப்பால் ஆங்கிலம் ஒழிந்ததா? இல்லையே. மேன்மேலும் வளர்ச்சியடைகின்றது. அதுபோன்றதே தமிழும். ஆனால் ஒன்றுமட்டும் அவசியம் செய்யவேண்டும். எப்படி ஆங்கிலம் முதலிய பிற அகராதிகளில் பிறமொழிச் சொற்கள் இன்னின்ன, செய்யுட்சொல் இன்னின்ன, இழிசனர் வழக்குச் சொற்கள் இன்னின்ன, என்னும் குறிப்புக் காணப்படுகின்றதோ அதேபோன்று தமிழ் அகராதியிலும் குறிக்கப்படல் வேண்டும். அத்தகைய அகராதியும் சொற்ப விலைக்குக் கிடைக்கும்படி இருத்தல் வேண்டும். அவ்விதமாயின் எப்பொழுது வேண்டுமானாலும் அவ்வகராதியிலுள்ள பேரேட்டுக் குறிப்பின் உதவியால் தூய தமிழ்ச் சொற்கள் இவை, திசைச் சொற்கள் இவை, கொச்சைச் சொற்கள் இவை என்று கண்டு கொள்ளலாம். நாள்தோறும் வளர்ச்சியடைந்து கொண்டே வரும் தமிழில், அதன் நாகரீகத்திற்கு ஏற்பச் சில புதுதம் புதிய சொற்களவரின் அவைதமை ஏற்றலே நலம். தற்காலம் மக்கள் வாழ்க்கைக்குரிய வணிகம், அரசியல் முதலிய பற்பல துறைகளிலும் பிறமொழிகள் வந்து கலக்கப்பெறும். இதனால் தமிழ் வளர்ச்சிக்கு இடையூறு ஏற்படும் என்று நான் கருதவில்லை. ஆதலால் எம்மொழியிலும், மக்கள் பெரும் பான்மையோர் பொருள் தெரிந்து பேசுவதும், எளிதில் ஏற்றுக்கொளப்படுவதுமே தான் அம்மொழி. இதுவே தமிழுக்கும் உரித்தாம்.

திருச்சி 5-8-41

---

வெள்ளவத்தை
ஸ்பின்னிங் அன் வீவிங் மில்ஸின்

## புடைவைகள்

இப்போது யாழ்ப்பாணத்திலெவ்வொருவீட்டிலும் பேசப்படும் வார்த்தைகளாம்

ஒருமுறை பரீக்ஷித்தால்—
எப்போதும் விரும்பப்படுவது.

ஒவ்வொருவிதமான தினிசிலும் நாம் புடைவைகளைச் செய்கிறோம்.

| | |
|---|---|
| வேட்டிகள் | டிரில்லுகள் |
| சால்வைகள் | சூற்துணிகள் |
| சேலைகள் | சருக்கள் |
| சாரங்கள் | 'ஷேட்'துணிகள் |
| தப்பாய்கள் | ஷீட்டுகள் |
| துவாய்கள் | பஞ்சணை உறைகள் |
| லோங்குளோத்ஸ் | மேசைத்துணிகள் |
| மல்லுகள் | பப்ளின்கள் |
| பெட்ஷீட்டுகள் | பன்னல்துணிகள் |

முதலிய இன்னும்பல எம்மிடம் உண்டு.
எங்கள் சில்லறைக் கடைக்கு வாருங்கள்.
பெரியகடை, யாழ்ப்பாணம்.
வெள்ளவத்தை ஸ்பின்னிங் அன் வீவிங்மில்ஸ்,
(இந்தியாவில் ஸ்தாபிதமானது):
(அங்கத்தவரின் பொறுப்பு வரையறைக்கப்பட்டது.)

Mis 127, 11-10-40—

---

## புதிய வெளியீடுகள்

சிவிக்ஸ் (Civics) எனப்படும்

## குடி இயல் நூல்

இலங்கை
வித்தியாபகுதியாரால் அங்கீகரிக்கப் பெற்றவை.

(அங்கீகார இலக்கம். 21 A & B / 41 திகதி 3-7-41)

6-ம் வகுப்புக்குரிய முதற்புத்தகம் விலை சதம் 50
7-ம் வகுப்புக்குரிய இரண்டாம் புத்தகம் விலைசதம் 50

யாழ்ப்பாணம்
சைவபரிபாலன சபைப்
பிரசுரமாக அச்சிடப்பட்டுள்ளன.

மானேஜர்,
சைவப்பிரகாச யந்திரசாலை,
யாழ்ப்பாணம்.

---

சி. எர். சாமி
## மன்மதக் குளிகை

மிகுந்த பலத்தையும் ரத்த விருத்தியையும் உண்டாக்கும்

அநேக பரிசுகள் பெற்று, உலகெங்கும் புகழப்பட்டது;
இதற்கு நிகரான ஔடதம் வேறில்லை
ஒரேகுளிகையில் பரீட்சிக்கலாம்.

இழந்த சக்தியும் பலமும் திரும்ப வரும், நல்ல ஜீரணம், ரத்த விருத்தி, சரீரக்கட்டு, தேகபுஷ்டி, வாலிபசக்தி, இவற்றைத்தரவல்லது. சகலவித பலஹீனம் இடுப்புவலி, உஷ்ணரோகங்கள் நீங்கும். ஒரு முறை பரீட்சித்தவர்களுக்கு இதன் அருங்குணம் விளங்கும். கேட்லாக்கிற்கு எழுதுங்கள்.

அர்ஜெண்ட்டார் முன்பண மனுப்ப வேண்டும்

60 குளிகை ரூபா 5 — 20 குளிகை ரூபா 2

தலைமை ஆபீஸ்:-
மலையப்பசாமி வைத்தியசாலை பழனி S

கிளை ஆபீஸ்:-
1 மலையப்பசாமி வைத்தியசாலை சிந்தாதிரிப்பேட்டை மதராஸ்
2 மலையப்பசாமி வைத்தியசாலை 143 செட்டியார்தெரு கொழும்பு
3 மலையப்பசாமி வைத்தியசாலை வண்ணார்பண்ணை கதிரேசன் கோவிலடி யாழ்ப்பாணம்

Y 221 31-3-4—30-3-41

---

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

---

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

(மீ 396)

**வெள்ளி செப்டம்பர் 16**

காலை 7-30 கீதாரம்பம்(இசைத்தட்டு) 7-40 தமிழில் செய்திகள் 7-50 குரான்-இ-ஷரீப் 8-00 இஸ்லாமிய துதிகள் 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-20 குமாரி ஸ்ரீமதி வீணை, பாட்டு 9-00 ஒலிபரப்பு முடிவு

1-00 படப்பாட்டுகள் (இசைத்தட்டு) 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 குமாரி ஸ்ரீமதி வீணை, பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-00 திருவாவடுதுறை என். ஆர். நடராஜ சுந்தரம் பிள்ளை நாகஸ்வரம் 5-45 அ. இ. ரே. வாத்தியகோஷ்டி 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 டி. வைத்யநாதஐயர்பாட்டு 6-30 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 7-00 தீனை இலக்கியம் 7-15 பாலே 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில்செய்திகள் 7 50திருவாவடுதுறை என். ஆர். நடராஜ சுந்தரம் பிள்ளை நாகஸ்வரம் 8-30 உலக விவகாரங்கள் 8-45 டி. வைத்யநாத ஐயர் பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகளும், சொற்பொழிவும் 10-00 ஒலிபரப்பு முடிவு.

**சனி செப்டம்பர் 20**

காலை 7-30 கீதாரம்பம் 7-40 தமிழில் செய்திகள் 7-50 திருவாசக விளக்கம் 8-00 எம். வி. நாதன் தேவாரம் 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 வி. வேணுகோபால ஐயர் பாட்டு 9-00 ஒலிபரப்பு முடிவு.

1-00 பிடித்த பாட்டுகள் (இசைத்தட்டு) 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 வி. வேணுகோபால ஐயர் பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2-05 ஸ்ரீமதி எம். கே. சூர்யாபாய் பாட்டு 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-00 மதராஸில் உள்ளபடி 5-45 இசைப்பயிற்சி 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 ஸ்ரீமதி. எம். கே. சூர்யாபாய் பாட்டு 6.30 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 7-00 செய்திக்கடிதம் 7-15 தாளவாத்தியக்கச்சேரி 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-50 மதராஸில் உள்ளபடி 9-15 புதிய வெளியீடுகள் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகளும், சொற்பொழிவும் 10-00 ஒலிபரப்பு முடிவு

**ஞாயிறு செப்டம்பர் 21**

காலை 7-30 கீதாரம்பம் ஒலிப்பதிவு. 7-40 தமிழில் செய்திகள் 7-50 தேவாரத்தை 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 ஸ்ரீமதி பி. பொன்னம்மாள் பாட்டு 9-00 ஒலிபரப்பு முடிவு.

12-00 பழகிய தூல்கள் (இசைத்தட்டு) 12-30 ஒலிமலர் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 டாக்கிப் பாட்டுகள் (இசைத்தட்டு) 2-05 தமிழில் செய்திகள் 2-10 ஸ்ரீமதி பி. பொன்னம்மாள் பாட்டு 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-00 டி. எம். தியாகராசன் பாட்டு 5-45 அ. இ. ரே. வாத்திய கோஷ்டி 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 5-05 எம். ஏ கல்யாண கிருஷ்ணவீணை 6-30 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 7 00 சாந்தா ஆ. கே (இசைத்தட்டு) 7.15 எது தமிழ்? 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-50 டி. எம். தியாகராசன் பாட்டு 8-30 எம். ஏ. கல்யாண கிருஷ்ணபாகவதர் வீணை 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகளும் சொற்பொழிவும் 10-00 ஒலிபரப்பு முடிவு.

**திங்கள் செப்டம்பர் 22**

காலை 7-30 கீதாரம்பம் (ஒலிப்பதிவு) 7-40 தமிழில் செய்திகள் 7-50 தம்பகோணம் எஸ். பக்கிரிசாமிப்பிள்ளைநாகஸ்வரம் 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 சங்கீதம் (இசைத்தட்டு) 9-00 ஒலிபரப்பு முடிவு.

1-00 திரைகானம்(இசைத்தட்டு)1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 ஸ்ரீமதி. எம். லக்ஷ்மி பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2-05 ஸ்ரீமதி டி. எஸ். பகவதி பாட்டு 2 30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-00 தம்பகோணம் எஸ்.பக்கிரிசாமிப்பிள்ளை நாகஸ்வரம் 5-45 இசைப்பயிற்சி 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 ஸ்ரீமதி எம். லக்ஷ்மி பாட்டு 6-30 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 7-00 ஸம்ஜான் பேச்சு 7-15 செய்திச் சித்திரம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள்

ரேடியோக் கச்சேரி

7-50 மைசூர். பி எஸ். ராஜா ஐயங்கார் பாட்டு மைசூர் டி. சௌடய்யா வயலின் என். கணேசய்யர்மிருதங்கம் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகளும் சொற்பொழிவும் 10-00 ஒலிபரப்பு முடிவு.

---

## தி மலாயன் டிரேடிங் கொம்பனி

(சிங்கப்பூர்க் கொம்பனி)

இருப்பு, பித்தளைச்சாமான்கள், சிமேந்துவகைகள் விற்பனவு செய்வோர் பெரியகடை, யாழ்ப்பாணம்.

"புரொப்பிரைட்டர்"
K. A இரத்தினசிங்கம்

Y 19. 4-3 41—3.3.4

---

திருநெல்வேலி ஒற்றுமை நிதி (வரை உளது)

அதிகாரம் பெற்ற மூலதனம் ரூபா 500,000.

ஒன்று 25 சதமாக 80 மாதங்கள் செலுத்தி ரூபா 25ம் ஆதாயமும் பெறலாம்

வங்கித்தொழிலும் வியாபாரமும்
இலாபகரமாய் நடக்கின்றன.

தேசியகருமங்களை வளர்ப்பதால் சுயேச்சைபெறமுடியும்.

இலகுவான முறையில் இறுக்கக்கூடிய கடன்கள் கொடுக்கிறோம்.
உயர்ந்த வட்டி வீதங்களோடு தவணைக்கும் நிபந்தமாயும், சம்பாத்தியத்திலும், நடைக்கணக்கிலும் பணம் ஏற்றுக்கொள்வோம்.

பங்குகளுக்கு முந்துங்கள்!

வ. சோமசுந்தரம்,
காரியாதிகாரி.

(வி) (Y. 22. 1-11-40 to 31-10-41)

---

## குயீன்பிரண்ட் (அரசி அடையாள) ஓடுகள்

குறைந்த விலை — நிறைந்த குணம்

எங்கும் பெயர்பெற்ற, உறுதிவாய்ந்த
ஊறுத, நல்ல சத்தமுள்ள
யாவரும் விரும்பும் அழகிய ஓடுகள்.

இ. சுந்தரமூர்த்தி, (Sole Agent)
பெரியகடை, யாழ்ப்பாணம்.

c/o S. Veeragathipillai & Sons.

( Y. 21. 11-8-40—10-8-41.) வி

---

Printed and Published by S. Adchalingam residing at Vannarponnai East, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Thursday September 18th 1941.